# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,906—1970 මැයි 15 වැනි සිකුරාදා—1970.5.15

14,906 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | 417 | ஏலவிற்பனையும், குத்தகை விற்பனையும் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 427 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 431 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | ஏல விற்பனைகள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | — | நானாவித அறிவித்தல்கள் | — |


### பதவிகள் — வெற்றிடம்

**" இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்கும் பொருந்தும் பொது நிபந்தனைகள் "**

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

***எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்களை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.***

எச். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அச்சகர்.

அரசாங்க அச்சகக் கந்தோர்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 14 ந் உ.

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.பொ.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்..*

*குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. **வேண்டிய தகைமைகள்.**— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. **பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல. : AA.105/X.2191/69

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களம்

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் குடித்துறை எஞ்சினியரின் பதவிகள்

மேலேயுள்ள தலைப்பின் கீழ், 23.1.1970 ஆந் திகதிய 14,890 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமாகிய அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு திருத்தஞ் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

**சம்பளமும், படிகளும்**

இப்பதவிக்கான திரட்டுச் சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—வருடமொன்றுக்கு ரூபா 7,800—3 × 360—8,880/9,600—4 × 360—11 × 480—16,320. திறமைகாண் தடைகள் ரூபா 9,600 முன்பும், ரூபா 13,920 முன்பும் உண்டு.

**குறிப்பு.**—(1) மேலேயுள்ள சம்பள அளவுத்திட்டத்தில், வருடாந்தச் சம்பளமாகிய ரூபா 13,440 க்கு மேலான சம்பளத்தைப் பெறுவதற்கு உயர் தொழிலுக்கான முழுத் தகைமைகளைப் பெறுதல் வேண்டும்.

(2) உயர் தொழிலுக்கான முழுத் தகைமைகளைப் பெறும்பொழுது, விண்ணப்பதாரர் ரூபா 9,960 அல்லது அதற்கு மேலான வருடாந்தச் சம்பளத்தைப் பெறுதிருப்பின் அத்திகதியிலிருந்து மேலே குறிப்பிட்ட சம்பள அளவுத் திட்டத்தில் ரூபா 9,960 வருடாந்தச் சம்பளத்தைப் பெறுவதற்கு உரிமையுடையவராவார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1970 ம் ௵ வைகாசி ௴ 8 ந் ௳.

5–347/1—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

No. AB 51/X. 2239/70

## தேசிய நூதனசாலைத் திணைக்களம்

### மக்கட் பாகுபாட்டியல் உதவியாளர் பதவி

தேசிய நூதனசாலைத் திணைக்களத்திலுள்ள மக்கள் பாகுபாட்டியல் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1970.6.5.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1970.6.5.

**குறிப்பு.**— (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்,

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம் :

(iv) **மருந்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :—**

(அ) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதும், விதவை, அனாதையர் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டத்திற்கு உதவுதொகை கொடுக்கவேண்டியதுமாகும் ;

(ஆ) இந்நியமனம் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையிலிருக்கும் ;

(இ) தெரிந்தெடுக்கப்பட்ட அபேட்சகர், ஒரு அரசாங்க சேவையாளராக இருந்தால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பதில் பதவியென்ற ரீதியில் நியமனம் கொடுக்கப்படும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—வருடமொன்றுக்கு ரூபா 6,720—12 × 360 உம் 3 × 480—12,480. வினைத்திறமைகாண் தடை வருடமொன்றுக்கு 11,040 ரூபாவுக்கு முன்னர்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமுடையவராயிருத்தல் வேண்டும் ;

(ஆ) 5.6.1970 ந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும், 35 வயதைக் கடக்காதவராயுமிருக்கவேண்டும் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்களுக்கு மேலெல்லை வயது வரையறை இயைபுடையதன்று) ;

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்தும் வரலாறு, அல்லது தொல் பொருளியல் அல்லது மெய்யியலில் முதலாம் அல்லது இரண்டாம் தரச் சிறப்புரிமைப் பட்டம் அல்லது மேற்கூறிய பாடங்கள் ஏதாவதொன்றில் உயர்ந்த பட்டம் பெற்றவராயும் ;

(ii) சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரம், கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையொன்றில் சிங்கள பாஷை அல்லது சிங்கள இலக்கியத்தில் சித்தியடைந்தவராயும் இருக்கவேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு**.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத்தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணபபப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ அ ” எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக்கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்கசேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மே மீ 8 ந் உ.

5-347/2—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

இல. வெ.மு/

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பிரான்சு அரசாங்கத்தால் வழங்கப்படும் தொழில்நுட்ப கூட்டுறவுப் புலமைப் பரிசில்கள்—1970

பிரான்சு அரசாங்கத்தால் வழங்கப்படும் மேற்குறித்த புலமைப் பரிசில்களை அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தத்தம் ஆராய்ச்சித் துறையில் அல்லது விசேடத்துவம் பெற்ற துறையில் விசேட அறிவு பெற்றுள்ளவர்களும் அத்துறைகளில் மேலும் பயிற்றப்பட விரும்புவோருமானவர்களுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன. பின் வரும் துறைகளிலேயே புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன :—

1. விவசாயமும் கிராம அபிவிருத்தியும்
2. பொதுச் சுகாதாரம்
3. தகவல் (பத்திரிகை)
4 பொது நிதி (வங்கி, வரவு செலவுத் திட்டம்)

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக் கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர் களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிர காரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் வரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

குறிப்பு 2.—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர் களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்பு வதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **கால எல்லை.**—புலமைப் பரிசில்களின் காலவெல்லை சாதாரண மாக 9 மாத கால அளவினதாகும். (3 மாத மொழிப் பயிற்சியும் 6 மாத விசேட பயிற்சியும்)

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரி களின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல் லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்திய டையத் தவறுதல் போன்று காரணங்களையிட்டு பிரான்சு அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின் போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 31.5.70 அன்று 25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவராய் இருக்க வேண்டும்.

(iii) பிரான்சு *மொழி அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(iv) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் அல்லது உயர் கல்வி நிலையத்தால் அல்லது உயர்தொழில் நிறுவனத்தால் வழங்கப்படும் பட்டம் அல்லது தகுதித் தேர்வுப் பத்திரம் அல்லது உயர் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படும் விசேடத்துவ துறையுடன் தொடர்பு பட்டுள்ள யாதேனும் முயற்சியில் நேரடியாக ஈடுபட்டிருக்க வேண்டும்.

(iii) குறித்த துறையில் 31.5.70 அளவில் குறைந்தபட்சம் 2 வருடங்களுக்குக் குறையாத செயல்முறை அனுபவம் பெற்றி ருக்கவேண்டும்.

*பிரான்சு மொழி பற்றிய அறிவு பெற்றிராதவர்களும், தெரிவு செய்யப்பட்டு புலமைப் பரிசில் வழங்கப்படுதற்கு சிபார்சு செய்யப்படும் காலத்துக்கும் பிரான்சு தேசத்துக்கு புறப்படும் காலத்துக்கும் இடைப் பட்ட காலத்துக்குள் பிரான்சு மொழி பற்றிய அறிவை பெற்றுக் கொள்வார்களென எழுத்துமூலம் மேற்கொள்ளின் சீர்தூக்கப்படு வார்கள். படிவத்தின் 25 ஆம் கூட்டில் இத்தொடர்பில் வாக்களிக்கப்பட வேண்டும்.

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத் தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப் பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 31.5.70 அளவில் நிறை வேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை விகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாமிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படி வத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக் கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) பிரான்சு தேசத்துக்குப் போய்த் திரும்புதற்கான பயணச்செலவு.

(ஆ) சகாயப்படியாக மாதாந்தம் 750 பிறுன்க்ஸ் (Francs).

(இ) படிப்புக்கு வேண்டிய புத்தகங்கள், சாதனங்கள் ஆகியவற்றின் செலவுகளின் பொருட்டான சகாயப்படி.

குறிப்பு.— இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல் காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியாபகுதி விதிகளுக்கும் பிரமாணங் களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர் முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகிய வற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், பிரான்சுக் குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசு வாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறி யைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத் துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும் அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரை யில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் பிரான் சில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப் படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்தி பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக் கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீட்கப்படு தற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத் துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப் படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மை யின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்ப தாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்கு பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு மே மாதம் 29 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப்பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையினுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக்காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரச் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
7.5.1970.

5–334—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### உடற்கல்விப் பரிசோதகர் (சிங்கள/தமிழ்) பதவி

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உடற்கல்விப் பரிசோதகர் பதவிகளுக்கு, கீழ்க்காணும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆண் அபேட்சகர்களிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவமுறைக்கு அமையத் தயாரிக்கப்பட்டு " நிரந்தரச் செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்தில் 1970 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இப் பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ரூபா 4,296—144 × 16—6,600 வருடாந்தம். வருடாந்தம் ரூபா 5,304 பெறமுன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

3. **நியமன நியதிகள்.**

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். நியமனம், முதற்கண், 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

(ii) விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(iii) நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியில் ஏற்கனவே உள்ள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவர் இப்பதவிக்கு முதற்கண் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

4. **சேவை நிபந்தனைகள்.**—அரசினர் சேவைக்கு புதிய முறைப்படி நியமிக்கப்படும் ஒருவரைப் பொறுத்தவரையில் அரசகரும மொழி நோக்கத்தின் பொருட்டு—

(i) தகுதிகாண்/பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாகும்.

(ii) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை, செயற்படுத்தும் பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமையவும் இனிமேல் ஆக்கப்படக்கூடியனவான விதிகளுக்கமையவும் அவர் ஒழுக வேண்டும்.

(iii) தகுதிகாண்/பரீட்சார்த்த காலத்தில் அவர் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும்.

(iv) தகுதிகாண்/பரீட்சார்த்த கால முடிவில் பதவியில் அவர் உறுதிப்படுத்தப்படுதல், ஏனையவற்றுடன், ஒரு வருட ,இரு வருட, மூன்று வருட காலத்தில் முறையே I ந், II ந், III ந் தர தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியடைதலைப் பொறுத்ததாகும். (I ந், II ந், தரத் தேர்ச்சிப் பரீட்சைகளில், காரியத்துக்கேற்ப ஒரு வருடம் அல்லது 2 வருடங்களில் சித்தியெய்தலாம்). விதிக்கப்பட்ட காலத்துக்குள் இத்தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியெய்தத் தவறுமிடத்து சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தம் செய்யப்படும் ; விதிக்கப்பட்ட காலத்திலிருந்து மேலும் 6 மாத காலத்துக்குள் ஒரு பரீட்சையில் சித்தியெய்தாவிடின் இடை நிறுத்தம் செய்யப்பட்ட சம்பளம் நிறுத்தப்பட்டு அப்பரீட்சையில் சித்தியெய்தும் காலம்வரை அல்லது கீழ்க்காணும் (v) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் அமையும்வரை சம்பள உயர்ச்சிப் பணம் நிறுத்தி வைக்கப்படும்.

(v) தகுதிகாண்/பரீட்சார்த்த கால முடிவில் விதிக்கப்பட்ட சிங்கள தேர்ச்சித் தரம் பெற்றுக் கொள்ளப்படாவிடின் 120 ம், 121 ம் இலக்க நிர்வாக விதிகளின் ஏற்பாடுகள் அமையும். (சிங்கள மொழி மூலம் சேர்க்கப்படும் அபேட்சகரைப் பொறுத்தவரையில் மேலுள்ள (iii) ம், (iv) ம், (v) ம் நிபந்தனைகள் அமையா).

5. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாக நிரூபிக்க வேண்டும் :—

(அ) 31.5.1970 அன்று 23 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(ஆ) சி. பா. த. அல்லது சமனான அல்லது உயர்தர பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட உடற்கல்வி கல்லூரி ஒன்றினால் வழங்கப்பட்ட தராதரப் பத்திரம் பெற்றிருப்பதுடன் அத்தராதரப் பத்திரத்தைப் பெற்றபின் 3 வருட உடற்கல்வி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அல்லது ஓர் அரசினர் பாடசாலையில் உடற்கல்விப் போதனாசிரியராக 5 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அல்லது கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் கலாசாலை ஒன்றில் 5 வருட உடற்கல்வி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(உ) சிங்கள/தமிழ் மொழியில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(ஊ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையராய் இருக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்படிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு.கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்தின் பொருட்டு வழங்கப்படும் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) கல்வி/உயர்தொழில் தகைமைகள் அல்லது இவ்விரண்டினையும் அத்தாட்சிப்படுத்தும் தராதரப் பத்திரங்கள்.

(இ) விண்ணப்பதாரியின் ஒழுக்கம், இப்பதவிக்கான அவருடைய தகுதி ஆகியவை தொடர்பில் சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள 3 நற்சாட்சிப் பத்திரங்கள். (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ள அபேட்சகர்கள் இவ்வுப பந்தியில் குறிப்பிடப்படும் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை).

7. அரசினர் சேவையினுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியில் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கும் உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

8. அச்சிடப்பட்ட படிவங்கள் ஒன்றும் வழங்கப்படமாட்டா. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமையவே விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படவேண்டும்.

9. அரசினர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் உரிய திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும் விதிக்கப்பட்ட திகதிக்குப்பின் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும்

அது திணைக்களத் தலைவரால் விதிக்கப்பட்டுள்ள திகதிக்குமுன் பெற்றுக் கொள்ளப்பட்டதெனவும் போதிய காரணம் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு திணைக்களத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

10. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப் படும். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 3 வார காலத்துக்குள் பெறத்தவறும் அபேட்சகர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, பண்பாட்டலு வல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தமது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

தொடரெண். பொ. நி./22/151,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ௵ மே ௴ 3 ந் உ

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

**உடற்கல்விப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (உறுப்பமைய எழுதவும்) : ————.
2. முகவரி : ————.
3. 31.5.1970 அன்றுள்ளபடி சரியான வயது :——வரு :——மா :—— நா : ——.
4. சாதியமும் பெறப்பட்ட வழியும் : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் : ————.
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
6. சி. பா. த. அல்லது சமமான அல்லது உயர்ந்த பத்திரம் பெற்றிருக் கிறீரா ? (பெற்றிருப்பின் எம்மொழி மூலமும் தராதரப் பத்திரத் தின் பெயரும் குறிப்பிடப்பட வேண்டும்—பிரதியொன்றும் இணைக் கப்பட வேண்டும்) : ————.
7. உடற்கல்வியில் பெற்றுள்ள தகைமைகள் : ————.
   (தராதரப் பத்திரங்களின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
8. பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள அறிவு : ————.
   (அ) சிங்களம் : ————.
   (ஆ) தமிழ் : ————.
   (இ) ஆங்கிலம் : ————.
9. படித்த பாடசாலைகளும் கல்லூரிகளும் : ————.
10. (அ) தற்போதைய உத்தியோகம் பற்றிய விபரங்கள் (ஆசிரியராயின் பதிவிலக்கம், பாடசாலைப் பெயர், சம்பள விகிதம், தற்போதைய வருடாந்தச் சம்பளம், அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி ஆகிய வற்றைக் குறிப்பிடவும்) : ————.
    (ஆ) தற்போதைய பதவியில் நீர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? அப்படியாயின், உறுதிப்படுத்தற் கடிதத்தின் பிரதியை இணைக்க வும் : ————.
11. உடற்கல்வியில் பெற்றுள்ள செயல்முறை அனுபவம் (விபரங்கள் கீழ்க்காணும் முறையில் கொடுக்கவும்) : ————.

| பாடசாலை/ கல்லூரி பெயர் | வகித்த பதவி | சேர்ந்த திகதி | விலகிய திகதி | சேவைக் காலம் வரு. மா. நா. | விலகிய தற்கான காரணம் |
|---|---|---|---|---|---|

12. யுத்த சேவை யாதேனும் புரிந்திருப்பின் அது பற்றிய விபரம் :—— (விடுகைப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
13. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் (இவர்கள் இனத் தவர்களாய் இருக்கலாகாது) பெயர்களும் பதவிப் பெயர்களும். 3 நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் (மூலப்படிகளல்ல) இணைக்கப்பட வேண்டும். அரசினர் சேவையிலுள்ள உத்தியோ கத்தர் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை. :————.
14. வேறு யாதேனும் விபரங்கள் :————.

மேலே நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியான வையுமென இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் யாதேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை என தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படு தற்கும் நியமனத்துக்குப் பின் காணப்படின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என நான் அறிவேன்.

திகதி : ————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

பிரதேச வித்தியாதிபதியின்/பிரதம வித்தியாதிகாரியின் சிபார்சு.

இல.................

க. ப. அ. அமைச்சின் நி. செ. (பொ. நி. கிளை).

திகதி : ————.

பிரதேச வித்தியாதிபதிக்காக/பிரதம வித்தியாதிகாரிக்காக.

5-196—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு

**அரசினர் ஆசிரியர் கலாசாலைகளில் உடற்கல்விப் போதனாசிரியர் பதவிகள்**

அரசினர் ஆசிரியர் கலாசாலைகளிலுள்ள உடற்கல்விப் போதனாசிரியர் (சிங்கள, தமிழ் மொழி மூல) பதவிகளுக்கு கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளரால் (ஆசிரியர் கலாசாலைகள் கிளை) 1970 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதிவரை விண்ணப்பங்கள் பெண் அபேட்சகர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**குறிப்பு** :—விண்ணப்பம் யாதேனும் அஞ்சலில் தவறிப்போனது அல்லது அதன் காரணமாக தடைப்பட்டது என்னும் குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கடைசி நாள்வரை விண்ணப் பங்களை அனுப்புதற்குத் தாமதிக்கும் விண்ணப்பதாரிகள் தமக்கு இடர் தேடுபவர்களாவர்.

2. **சம்பள விகிதம்** : இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 3,720—16 × 90 வினைத்திறமைகாண் தடை, 5 × 144—ரூ. 5,880 வருடாந்தம்.

**குறிப்பு** :—1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் : ரூ. 1,560—14 × 72—ரூ. 2,568, ரூ. 2,640 இல் வினைத் திறமைகாண்தடை, 5 × 120—ரூ. 3,240 வருடாந்தம்.

3. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்** :

(அ) சி. பா. த. பத்திரம் அல்லது லண்டன் மற்றிகுலேஷன் போன்ற சமமான தகைமைகள் பெற்றிருப்பதுடன் அங்கீகரிக் கப்பட்ட ஒரு உடற்கல்விப் பாடசாலையால் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரம் அல்லது உடற்கல்வித் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(ஆ) சி. பா. த. பத்திரம் அல்லது சமமான ஒரு பரீட்சைத் தராதரப் பத்திரம் பெற்றிருப்பதுடன் உடற்கல்விப் பயிற்சி யிலும் ஒன்று அல்லது மேற்பட்ட தொகை மெய்வல்லுநர் விளையாட்டுகளில், போதனாசிரியராக நியமிக்கப்படுதற்கு வேண்டிய உயர்ந்த தரமெனக் கருதப்படக்கூடியளவுக்கு, செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ; இவற் றுடன் கற்பித்தல் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

(இ) சிங்கள/தமிழ் மொழி மூலம் கற்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஈ) 1970 ம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாத வராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையி லுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

4. **விசேட நிபந்தனைகள்** :

(அ) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள எவ் வாசிரியர் கலாசாலைக்கும் நியமிக்கப்படலாம்.

(ஆ) இப்பதவி நிரந்தரமானதும் பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையது மாகும். பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பளத் திட்டத் துக்குக் கட்டணங்கள் அறவிடப்படும். இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதற்குமுன் ஆசிரியர்களாக உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை வகிப்பவர்கள் தெரிவு செய்யப்படின், அவர்கள் இப்பதவியை வகிக்கும்வரை அவைகளை உபகாரச் சம்பள உரித்துடையனவாகப் பிரகடனஞ் செய்தற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) மேலுள்ள 3 (ஆ) ஆம் பந்திக்கமைய அபேட்சகர் ஒருவர் நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படின் அவரின் பதவி உபகாரச் சம்பள உரித்தற்றதாகும். அத்தகைய அபேட்சகர்கள் பகிரங்க சேவை சேமலாப நிதிக்கு சம்பளத்தில் 5% கட்டணம் செலுத்த வேண்டும்.

5. கீழே கொடுபட்டுள்ள, விதிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும். அச்சிடப்பட்ட படிவங்கள் இவ்வமைச்சினால் வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலில் கொடுபட்டுள்ள படிவத்தை பிரதி செய்துகொள்ள வேண்டும்.

6. இவ்வர்த்தமானியின் I ம் பகுதி II ம் பிரிவில் கொடுபட்டுள்ளவையும் அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்கும் கவனம் கோரப்படுகிறது.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு.

கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆந் திகதி

## மாதிரிப் படிவம்

**அரசினர் ஆசிரியர் கலாசாலைகளிலுள்ள உடற்கல்விப் போதனாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பம்**

1. (i) முழுப்பெயர் : ————.
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் : ————.
   (திரு/திருமதி/செல்வி எனக்குறிப்பிடுக)
2. அஞ்சல் முகவரி :— (i) தனிப்பட்ட : ————.
   (ii) அலுவலக : ————.
3. 1970 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதியன்றுள்ளபடி சரியான வயது :— வரு :——— மா :——— நாள் : ———
4. சாதியமும் அது எங்ஙனம் பெறப்பட்டதும் : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் : ————.
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
6. கல்வித் தகைமைகளும் அவை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளும் (கல்வித் தகைமைப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) : ————.
7. உயர்தொழிற் தகைமைகள் : (உயர் தொழிற் தகைமைப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) : ————.
8. படித்த பாடசாலைகள் அல்லது கல்லூரிகள் : (சேர்ந்த, விலகிய திகதிகள் கொடுபடல் வேண்டும்) : ————.
9. கற்பித்தல் அனுபவம் : (விபரங்களைக் கீழ்க்காணும் முறையில் கொடுக்கவும் : ————.

| பாடசாலையின்/கல்லூரியின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | வகித்த பதவி | சேவைக்காலம் வரு. | மா. | நாள் | விலகியதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | மொத்தம் | | | | |

10. சிங்களத்தில்/தமிழில் பெற்றுள்ள அறிவு : ————.
11. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் (இனத்தவர்களல்ல) பெயர்களும் பதவிப் பெயர்களும் : ————.
    (சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட 3 நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள்—மூலப் படிகளல்ல—இணைக்கப்பட வேண்டும். அரசினர் சேவையிலுள்ளவர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை)
12. வேறு யாதேனும் தகைமைகள் : ————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென உறுதியுரை அளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் யாதேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை என தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

————.
அதிபரின் கையொப்பம்.

திகதி : ————.

5–247—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### அரசினர் ஆசிரியர் கலாசாலைகள் (சிங்கள/தமிழ்) பயிற்சி ஆசிரியர்/ஆசிரியை பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள அரசினர் ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சி ஆசிரியர்/ஆசிரியை பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு (ஆசிரியர் கலாசாலைகள் கிளைக்கு) 1970 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதியன்று அல்லது முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

**குறிப்பு :** (i) அச்சிடப்பட்ட படிவங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அறிவித்தலில் கொடுபட்டுள்ள படிவத்தை அபேட்சகர்கள் பிரதி செய்துகொள்ள வேண்டும்.

(ii) விண்ணப்பம் அஞ்சலில் காணாமற்போனது அல்லது தாமதிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டு யாதேனும் சீர்தூக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களைக் கடைசி நாள் வரை தாமதிக்கும் விண்ணப்பதாரிகள் தாமே தமக்கு இடைஞ்சலை விளைவிப்பார்கள்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—
(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையனவுமாகும். தெரிவு செய்யப்படுதற்குமுன், உபகாரச் சம்பள பிரமாணக் குறிப்புகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை ஆசிரியர்களாக வகிக்கும் நியமதாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் வகிக்கும்வரை இப்பதவிகள் உபகாரச் சம்பள உரித்துடையனவாகப் பிரகடனஞ் செய்யப்படும்.
(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கையிலுள்ள எவ்வாசிரியர் கலாசாலைக்கேனும் நியமிக்கப்படக்கூடும்.

**3. சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிகளுக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—
(i) பயிற்றப்பட்ட பட்டதாரிகள் : ரூ. 6,024—4 × 144, 8 × 180—2 × 240—8,520 வருடாந்தம்.
**(குறிப்பு**—1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் : ரூ. 3,420—4 × 120—8 × 180—2 × 240—5,820)
(ii) பட்டதாரிகள் அல்லது உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்—
ரூ. 5,592—7 × 144, 8 × 180—2 × 240—8,520 வருடாந்தம்.
**(குறிப்பு**–1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத் திட்டம் : ரூ. 3,060—7 × 120—8 × 180—2 × 240—5,820)

**4. தேவைப்படும் தகைமைகள்.**—அபேட்சகர்கள் ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்தியான சான்று காட்டவேண்டும்.

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 29.5.70 அன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது)

(இ) (i) அபேட்சகர்கள், பட்டம்பெற்றபின் மூன்று வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற பயிற்றப்பட்ட பட்டதாரிகளாக அல்லது பயிற்சி பெற்றபின் குறைந்தபட்சம் ஐந்து வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக இருக்க வேண்டும். சிங்களத்தில்/தமிழில் சிறந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் பின்வரும் பாடங்களில் இரண்டை அல்லது கூடிய தொகை பாடங்களைக் கற்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(அ) சிங்கள மொழியும் இலக்கியம்
(ஆ) தமிழ் மொழியும் இலக்கியம்
(இ) ஆங்கில மொழியும் இலக்கியம்
(ஈ) கல்வி
(உ) உளநூல்
(ஊ) சரித்திரம்
(எ) புவியியல்
(ஏ) குடியியல்
(ஐ) பௌத்த சமயம்
(ஒ) பாலர் வகுப்பு கற்பித்தல் முறைகள்
(ஓ) பொது விஞ்ஞானம்
(ஔ) கணிதம்

5. இவ்வரசாங்க வர்த்தமானியின் I ஆம் பகுதி II ஆம் பிரிவு ஆரம்பத்தில் கொடுபட்டுள்ளவையும் அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்கும் கவனம் கோரப்படுகிறது.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
26.4.1970.

**(மாதிரி விண்ணப்பப் படிவம்)**

**அரசினர் ஆசிரியர் கலாசாலைகள் (சிங்கள/தமிழ்) பயிற்சி ஆசிரியர்/ஆசிரியை பதவிகளுக்கான விண்ணப்பம்**

1. (i) முழுப்பெயர் : ————.
(ii) முதலெழுத்துகளுடன் பெயர் : ————.
(திரு/திருமதி/செல்வி என்பதைக் குறிப்பிடவும்)

2. தபால் விலாசம் : (i) சொந்த : ————.
(ii) அலுவலக : ————.

3. (i) பிறந்த திகதி : ————.
(ii) 29.5.1970 அன்றுள்ளபடி சரியான வயது :
வரு : ————. மா : ————. நா : ————.

4. சாதியமும் அது எவ்வாறு பெறப்பட்டதென்பதும் : ————

5. பிறந்த இடம் : ————.
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பாட்டன் : ————.

6. (i) கல்வித் தகைமைகளும் அவை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளும் (ஆககூடிய கல்வித் தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) : ————.
(ii) பட்டப் பரீட்சைக்கு எடுத்த பாடங்கள் : ————.

7. உயர்தொழில் தகைமைகள் (பெற்றுக் கொள்ளப்பட்ட உயர் தொழில் தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) : ————.

8. படித்த பாடசாலைகளும் கல்லூரிகளும் (சேர்ந்த விலகிய திகதிகள் கொடுபட வேண்டும்) : ————.

9. கற்பித்தல் அனுபவம் : (விபரங்களைக் கீழ்க்காணும் முறையில் கொடுக்கவும்) : ————.

| பாடசாலையின்/கல்லூரியின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | வகித்த பதவி | சேவைக்காலம் வரு. மா. நா. | விலகியதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | மொத்தம் : | | |

10. சிங்களத்தில்/தமிழில் பெற்றுள்ள தகைமை : ————.

11. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துள்ளவர்களின் (இனத்தவர்களல்லாதவர்கள்) பெயர்களும் பதவிப் பெயர்களும் : ————. (மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் பிரதிகள் (மூலங்களல்ல) இணைக்கப்பட வேண்டும். அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவை தேவையில்லை.)

12. வேறு யாதேனும் தகைமைகள் : ————.

இவ்விண்ணப்பத்தில் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இவ் விபரங்களில் யாதேனும் பிழையானவை அல்லது சரியற்றவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப் படுதற்கும் நியமனத்துக்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.
அதிபரின் சிபார்சு.

————,
அதிபரின் கையொப்பம்.

திகதி : ————.

5–248—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

இல. வெ. மு/5/267

**கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**கொழும்புத் திட்டத்தின் கீழான தொழில்நுட்பத் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிகள்—அவுஸ்திரேலியா, 1971**

கொழும்புத் திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியா அரசாங்கத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(அ) பட்டப்பின் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிகள் :—
(i) தன்னியக்கப்பொறி எந்திரவியல்.
(ii) குளிரேற்றல் எந்திரவியல்.

(ஆ) பட்டமுன் (5 வருட) தகுதித் தேர்வுப் பயிற்சி நெறி—.
(i) பொறிமுறை எந்திரவியல்.

இலங்கையில் அல்லது வெளி நாடுகளில் யாதேனும் ஒரு பல்கலைக் கழகத்தில் அல்லது தொழில் நுட்பவியல் நிலையத்தில் பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவோர் விண்ணப்பித்தற்குத் தகுதியற்றவராவர்.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

**குறிப்பு 1.** புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப் படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு 2.** சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27ம் கூட்டை பூரணப் படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப் பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

**குறிப்பு 3.** ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

**2. கால எல்லை :** பட்டப்பின் புலமைப் பரிசில்கள் சாதாரணமாக ஒரு வருட கால அளவினதாகவும் பட்டமுன் தகுதித் தேர்வுப் புலமைப் பரிசில்கள் ஐந்து வருட கால அளவினதாகவும் அமையும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றிக் கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு அவுஸ்திரேலியா அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

**3. தகவுத்திறன் :**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) பட்டப்பின் புலமைப் பரிசில்களுக்கான அபேட்சகர்கள் 1.9.71 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராயும் பட்டமுன் புலமைப் பரிசில்களுக்கான அபேட்சகர்கள். 1.9.71 அன்று 22 வயதுக்குக் குறைந்தவராயும் இருக்க வேண்டும்.

(iii) ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(iv) (அ) மேலுள்ள 1 (அ) (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் பௌதிகத்தில், கணிதத்தில் அல்லது எந்திரவியலில் வழங்கப்படும் பட்டம் அல்லது பொறிமுறை எந்திரவியல் வழங்கப்படும் கூட்டுறுப்பினர் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) மேலுள்ள 1 (அ) (2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் எந்திரவியல் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) மேலுள்ள 1 (ஆ) (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டமுன் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின் க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் ஒரே தோற்றத்தில் கணிதம், பௌதிகம், இரசாயனம் ஆகிய பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

**குறிப்பு 1.** அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபன அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.9.71 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2.** தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

**4. அளிப்பு நிபந்தனைகள் :** இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குப் போவதற்கும் பயிற்சி நெறியைச் சித்திரமாகப் பூர்த்தி செய்தபின் திரும்புதற்குமான போக்குவரத்து.

(ஆ) தாபரிப்புச் சகாயப்படி.

(இ) உடைகளுக்கான ஒரு சகாயப்படி.

(ஈ) தாபித்தற் சகாயப்படி.

**குறிப்பு** :—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

**5. நேர்முகப் பரீட்சை :** தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

**6. உடன்படிக்கை :** தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், அவுஸ்திரேலியாவுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும் அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

**7. வைத்தியப் பரீட்சை :** தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் அவுஸ்திரேலியாவில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீட்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டபின் அவைகளை ஏற்றுக் கொள்ளல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14 இவ்வனுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு மே மாதம் 29 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும் உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ 10/- பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத்தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச்

சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
6.5.1970.

5–238—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று வடபிரிவின் திடீர் மரண விசாரணை அதிகாரி பதவி

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று வடபிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்காக கீழ்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காட்டியுள்ள மாதிரிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு மே மாதம் 19ந் திகதிக்கு முன் அரசாங்க அதிபர், கச்சேரி, அம்பாறை என்ற விலாசத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

1. **தகைமைகள் :**

(அ) விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்தன்று 30 வயதுக்குக் குறையாதவராகவும் 60 வயதுக்கு மேற்படாதவராகவும்,

(ஆ) நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பகாரர் அக்கரைப்பற்று வடபிரிவில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) தமிழ் எழாம் தரத்தில் அல்லது அதற்குக்கூடிய பரீட்சை ஒன்றில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும். சிங்கள அறிவு விசேட தகைமையாகக் கருதப்படும்.

2. விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழ் குறிப்பிடப்படும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப்பத்திரம்.

(ஆ) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்விச் சான்றிதழ்.

(இ) அண்மையில் பெற்ற இரு நல்லொழுக்கச் சான்றிதழ்.

3. இந்தப் பதவிக்காக எல்லா விண்ணப்பதாரர்களும் அவருடைய கையெழுத்திலேயே விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்யவேண்டும்.

4. இந்தப் பதவிக்காக நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ உதவி பெறுவதற்கு முயற்சி எடுத்தலால் தகுதியின்மை ஒன்றாகக் கருதப்படும்.

5. விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்காக தோற்றவேண்டி ஏற்படும் அது சம்பந்தமான பிரயாணக் கட்டணங்களோ ஏனைய கொடுப்பனவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6. இந்தப் பதவிக்காக அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியர்களினதும் உள்ளூராட்சி ஸ்தாபனங்களின் அங்கத்தவர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பதாரரின் ஆங்கில மொழி பற்றிய அறிவு மேலதிக தகைமை ஒன்றாகக் கருதப்படும்.

எம். டீ. சி. கருணசேகர,
மேலதிக அரசாங்க அதிபர்
அரசாங்க அதிபருக்காக,
அம்பாறை மாவட்டம்.

அம்பாறைக் கச்சேரி,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 29 ந் உ.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் : ———.
(குடும்பப் பெயருடன் தெளிவான எழுத்தில்)

2 விலாசம் : ———.

3. நிரந்தர வசிப்பிடமும் அங்குவசித்த காலமும் :———.

4. (அ) விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் தினத்தன்று வயது : ———.
(ஆ) பிறந்த திகதியும் இடமும் : ———.

5. விவாகமானவரா ? விவாகமாகாதவரா? :———.

6. கல்வித் தகைமைகள் : ———.

7. தற்போதைக்குச் செய்யும் தொழில் : ———.

8. இதற்குமுன் தொழில் செய்தவரா ? ———.
(அப்படியாயின் அதுபற்றிய விபரங்கள்)

9. தனக்குச் சொந்தமாகவுள்ள சொத்துக்களின் அளவு பற்றிய விபரங்களுடன் அதன் பெறுமதி : ———.

10. விண்ணப்பதாரர் கடனாளியாக இருக்கிறாரா ? ———.

11. விண்ணப்பதாரர் ஏதாவதொரு குற்றத்திற்காக குற்றவாளியாகி நீதிஸ்தலத்தின் மூலம் தண்டனை பெற்றுள்ளாரா ?

12. இப்பதவிக்காக உள்ள ஏனைய தகைமைகள் இருந்தால் அவைபற்றிய விபரங்கள் : ———.

மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவை என்பதையும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ———.

5–164—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## இலங்கை அரச கடற்படை—மருத்துவ அலுவலர் பதவி

20.3.70 ஆம் திகதிய 14,898 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம், இலங்கை அரச கடற்படையின் மருத்துவ அலுவலர் பதவிக்குரிய விண்ணப்பங்களின் முடிவுத் திகதி 1970 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி வரை பின்போடப்பட்டுள்ளது.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
த. பெ. இல. 593,
கொழும்பு,
1970 ஆண்டு மே மீ 7 ஆம் திகதி.

டீ. வீ. ஹன்சர்,
கொமடோர்,
பதில் கடற்படைத் தளபதி.

5–302—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### பகுதி நேர அறிவிப்பாளர்—வர்த்தக சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் (தெலுங்கு/மலையாளம்) பகுதி நேர அறிவிப்பாளர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாளொன்றுக்கு ஆகக்கூடுதலாக ரூபா 20 பெறக்கூடியவாறு மணித்தியாலம் ரூபா 2.50 வீதம் அமைய அடிப்படையில் வேலை வழங்கப்படும். போக்குவரத்து படிகளோ அல்லது வேறு எந்தப்படிகளோ கொடுக்கப்படமாட்டா.

விண்ணப்பதாரர்கள் ஊதியம் எதுவுமின்றி சிறிது காலத்திற்குப் பயிற்சி பெறவேண்டி நேரிடும்.

பகுதிநேர அறிவிப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் நிறுவனத்தின் கிரமமான ஊழியர்களாக கருதப்படமாட்டார்கள். ஆனால் அவர்களின் சேவையின் தேவை ஏற்படும்போது அழைக்கப்படுவார்கள்.

2. விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு கூடுதலாகவும், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் அல்லது அதற்கு சமமானது அல்லது உயர்தரப்பரீட்சை ஆகியவைகளில் ஒன்றிலேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சிங்களம் சுமாராக தெரிந்திருந்தால் மேலதிக தகைமையாகக் கருதப்படும். இக்கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்யும் ஊழியர்கள் இத்தகைமைகளைப் பெற்றிருப்பின் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்

3. விண்ணப்பதாரர்கள் இவ்விளம்பரத்துடன் இருக்கும் மாதிரிப் படிவங்களில் தமது விண்ணப்பங்களை நிரப்பி, மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், டொரிங்டன் சதுக்கம், கொழும்பு—7 என்ற முகவரிக்கு 1970 ஆம் ஆண்டுவைகாசி மாதம் 31 ந் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பவேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டா. தபாலுறையின் இடதுபுற மூலையில் "பகுதிநேர அறிவிப்பாளர் தெலுங்கு/மலையாளம்)" என்று விளக்கமாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்படமாட்டா.

கொழும்பு-7.
2.5.1970.

என். டி. ஜயவீர,
மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

#### பகுதி நேர அறிவிப்பாளர் பதவி
(தெலுங்கு/மலையாளம்)

1. முழுப் பெயர் :————.
2. நிரந்தர தபால் முகவரி :————ணி
3. பிறந்த திகதியும் இடமும் :————.
   (பிறப்புப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
4. 31.5.1970 இல் சரியான வயது : ————.
   வருடங்கள் ........மாதங்கள் ...... நாட்கள். ..........
5. தேசிய இனம் :————.
6. கல்வித் தகைமைகள் :————.
   (தகைமைப்பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)
7. தேர்ச்சித் தரம் (அ) தெலுங்கு/மலையாளம் : ————.
   (ஆ) சிங்களம் :————.
   (இ) பிறமொழிகள் :————.
8. ஒலிபரப்புதலில் உள்ள அனுபவ விபரங்களும் மற்றும் வேறெந்த விசேஷ கோரிக்கைகளும் :————.
9. நற்சான்று இதழ்கள் வழங்கியவர்களின் பெயர்களும் முகவரிகளும் :————.
   (பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)
10. தற்போதைய, முன்னைய உத்தியோக விபரங்கள், ஏதுமிருப்பின் வேலைக்கு அமர்த்தப்பட்ட திகதிகளுடன் :————.

திகதி :—

..................
கையொப்பம்.

5–324—15.5.70 ஆந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### கல்வி, கலாச்சார, அலுவல்கள் அமைச்சு

#### (இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி)

#### வர்த்தக பிரிவில் நடைபெறும் உயர்தொழில் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்தல்—கல்லூரி ஆண்டு 1970/71

மருதானை இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் வர்த்தகப் பிரிவில் நடைபெறும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

| பயிற்சி நெறி | போதனுமொழி | காலம் | நேரம் |
|---|---|---|---|
| 1. (அ) செயலாண்மைத் துறையில் உயர்தொழில் பயிற்சி நெறி .. | ஆங்கிலம் .. | 4 வருடங்கள்.. | பகல் முழுநேரமும் பின்னேரமும் |
| (ஆ) செலவுக் கணக்கியல் துறையில் உயர்தொழில் பயிற்சி நெறி .. | ஆங்கிலம் .. | 3 வருடங்கள்.. | பகல் முழு நேரமும் பின்னேரமும் |
| (இ) போக்குவரத்துத் துறையில் உயர்தொழில் பயிற்சி நெறி .. | ஆங்கிலம் .. | 4 வருடங்கள்.. | பின்னேரம் |
| (ஈ) வங்கித் தொழில் துறையில் உயர்தொழில் பயிற்சி நெறி .. | ஆங்கிலம் .. | 3 வருடங்கள்.. | பின்னேரம் |

2. மேற்குறித்த பயிற்சி நெறி எதற்கும் மாணவர்களை அனுமதித்தற்கு புகுமுகப் பரீட்சை ஒன்றும் நடைபெறமாட்டாது. வாய்மூலப் பரீட்சை மூலமே மாணவர்களை அனுமதித்தல் தீர்மானிக்கப்படும்.

3. வேலையில் அமர்ந்துள்ளவர்களின் விண்ணப்பங்கள் அவர்களை வேலைக்கு கொண்டுள்ளவர்கள் மூலம் அனுப்பப்படவேண்டும்; அத்தகைய விண்ணப்பங்களை அவர்கள் விதப்புரை செய்து அனுப்பும்போது விண்ணப்பதாரியின் வேலையின் தன்மை பற்றித் திட்டமாகக் குறிப்பிட வேண்டும். வேலைக்கு அமர்த்தியுள்ளவர்கள் மூலம் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. பயிற்சி நெறிகள் ஒவ்வொன்றுக்குமான விண்ணப்பக் கட்டணம் ரூ. 2.00 ஆகும் இப்பெறுமதி முத்திரைகள் விண்ணப்பப்படிவங்களில் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அவை அழிக்கப்பட வேண்டும்.

4. தகவுத்திறன் நிபந்தனைகள் உட்பட இப்பயிற்சி நெறிகள் பற்றிய சகல விபரங்களும் இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் வர்த்தகப் பிரிவால் வெளியிடப்படும் கைநூலில் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கைநூலை ரூ. 2.80 கொடுத்து கொழும்பு 1, பழைய செயலகத்திலுள்ள அரசினர் வெளியீடுகள் விற்பனை நிலையத்திலிருந்து நேரடியாகவோ, அல்லது ரூ. 3 30 (தபால் செலவுட்பட) அனுப்பி, மருதானை, இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து தபால் மூலமோ பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை நிரப்பமுன் இக்கைநூலை வாசிக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை கூறப்படுகின்றது.

5. கொழும்பு 10, இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரிப் பதிவாளரிடமிருந்து பெறற்பாலனவான படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, 1970 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் தேதியன்று, அல்லது அதற்கு முன்னர் அவருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

6. உரிய பெறுமதிக்குக் குறைவான முத்திரைகள் ஒட்டப்பட்ட, அல்லது முற்றுகப் பூரணப்படுத்தப்படாத, அல்லது உரிய படிவத்தில் சரியாக நிரப்பப்படாத அல்லது உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எஸ். எல். த சில்வா,
பிரதி மகா வித்தியாதிபதி,
(தொழில் நுட்பக் கல்வி)
மகா வித்தியாதிபதிக்காக.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆந் திகதி.

5–239—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**பேராதனை இலங்கைப் பல்கலைக் கழகம், வித்தியோதய பல்கலைக் கழகம், வித்தியலங்கார பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கல்வித்தகுதித் தேர்வுப்பயிற்சி நெறிகள், 1970/71**

பேராதனை இலங்கைப் பல்கலைக் கழகம், வித்தியோதய பல்கலைக் கழகம், வித்தியலங்கார பல்கலைக் கழகம் ஆகியவற்றில் நடைபெறும் கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிகளில் பட்டப்பின் பயில்வு பெறுவதற்கு அபேட்சகர்களைத் தெரிவு செய்தற்கு அரசினர் அல்லது ஆசிரியர் கலாசாலைகளில் தற்போது சேவை புரியும் பட்டதாரி ஆசிரியர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பிரதேச/ மாவட்ட வித்தியாதிபதிக்கு/பிரதம வித்தியாதிகாரிக்கு 29.5.1970 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

**குறிப்பு.**— விண்ணப்பம் யாதேனும் அஞ்சலில் தவறிவிடத்து அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

2. இத்தகுதித் தேர்வுப் பயிற்சி நெறி முழுநேரப் பயிற்சி நெறி யாகும்.

3. **தேவைப்படும் தகைமைகள் :** ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின் வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ஆ) 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆந் திகதியன்று 45 வயதுக்கு மேற்படாதவராய் இருக்க வேண்டும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவராய் இருக்க வேண்டும் ;

(ஈ) 1.1.70 அன்று அரசினர் அல்லது வித்தியாதிபதி முகாமைப் பாடசாலை ஒன்றில் அல்லது ஆசிரிய கலாசாலை ஒன்றில், பட்டதாரிச் சம்பள விகிதத்தில் பட்டதாரி ஆசிரியராக 5 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ;

(i) அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலை ஒன்றில் தகுதியுடைய ஆசிரியராகப் புரிந்த சேவையும் அவருடைய நியமனம் பிரதேச வித்தியாதிபதியால் அல்லது பிரதம வித்தியாதி காரியால் அங்கீகரிக்கப்பட்டிருப்பின் 5 வருட அனுபவத்தைக் கணித்தற்பொருட்டு அங்கீகரிக்கப்படும். இந்நோக்கத்துக்கு கட்டணம் அறவிடும் பாடசாலைகளாக 1951 ஆம் ஆண்டு மாறிய உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் தனிப் பட்ட கட்டணம் அறவிடாத பாடசாலைகளாக 1.12.60 அன்று மாறிய பாடசாலைகளும் அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாடசாலை சாலைகளாகக் கருதப்படும் ;

(ii) பிராச்சீன பண்டித தராதரப் பத்திரம் உள்ளவர்களும் பிராச்சீன பண்டித தராதரப் பத்திரத்திற்கான சம்பள விகிதத்தில் வைக்கப்பட்டுள்ளவர்களுமான, அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக் கழகப் பட்டதாரிகள் அவர்களது பட்டதாரிச் சம்பள விகிதத்தில் வைக்கப்பட்ட திகதியிலிருந்து அவர்களது சேவையைக் கணிக்கும் பொழுது இங்கு குறிக்கப்பட்டுள்ள 5 வருடத்திற்கான சேவை அனுபவத்தை சேர்த்துக் கொள்ளுதற்கு அனுமதிக்கப்படுவர்.

(உ) சிங்களத்தில்/தமிழில்/ஆங்கிலத்தில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

4. **பயிற்சி நெறி :**

(அ) கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறி ஒரு வருடம் நடை பெறுவதாகும் ;

(ஆ) பயிற்சி நெறிக் காலத்தில் எந்நேரத்திலேனும் வேலையில், ஒழுக்கத்தில் அல்லது வரவில் திருப்தியற்றதாகக் காணப்படும் ஆசிரியர்கள் பயிற்சி நெறியிலிருந்து விலக்கப்படுவார்கள்.

5. ஒரு பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவை மூலம் தெரிவு நடைபெறும். பரீட்சை, 17.7.1970 அன்று பரீட்சாதிகாரியால் நடாத்தப் படும். பரீட்சை பின்வரும் பாடங்களிலாகும் :

(1) தற்கால விடயங்கள் பற்றிய பொதுத் தகவலும் அறிவும் கல்விப் பிரச்சினைகள் பற்றிய தகவலும் அறிவும்.

(2) பொது விவேகம்.

3. பேராதனை, இலங்கைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறி ஆங்கிலத்தில் சிறந்த அறிவு பெற்றுள்ள வர்களுக்கும் வித்தியோதய, வித்தியலங்காரப் பல்கலைக் கழகங்களில் நடைபெறும் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிகள் சிங்களத்தில் சிறந்த அறிவு பெற்றுள்ளவர்களுக்குமாக அமையும்.

7. **ஒப்பந்தம் :** இப்பயிற்சி நெறிகளுக்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் பயிற்சி நெறியைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்தபின் கல்விப் பகுதியில் ஆகக் குறைந்தது 5 வருடம் கடமை புரிவதாகப் பிரதேச வித்தியாதிபதியுடன் ஓர் உடன்பாட்டுக்கும் உறுதிமுறிக்கும் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். எனினும், பயிற்சி நெறியால் ஏற்படும் செலவு ரூ. 10,000 க்கு மேற்பட இருப்பின், ஒப்பந்த காலம் திறைசேரியின் 25.11.63 ஆந் திகதிய 627 ஆம் இலக்கச் சுற்றுநிரு பத்தின்படி தீர்மானிக்கப்படும்.

8. விதிக்கப்பட்ட காலத்துக்குள் தகுதித் தேர்வு தகைமையைப் பெறுத் தவறும் அபேட்சகர் எவரும், படிப்பு லீவுக்காலம் அவருக்குச் சம்பளமாகவும் சகாயப்படிகளாகவும் கொடுக்கப்பட்ட முழுத் தொகை யையும் அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

9. **படிப்பு லீவு :** தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்கு முழுச் சம்பள படிப்பு லீவு வழங்கப்படும். அத்தகைய விண்ணப்பதாரிகள் படிப்பு லீவுக்கு உரிய மாவட்ட கல்விக் கந்தோருக்கு அங்கிருந்து பெறற் பாலனவாகிய படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

10. அபேட்சகர் ரூ. 20 பெறுமதியுள்ள முத்திரைகளை ஒட்டி அவைகளை தனது கையொப்பமும் திகதியும் இட்டு அழிக்க வேண்டும். முத்திரைகள் ஒன்றுக்கு மேல் ஒன்று வரக்கூடியதாக ஒட்டப்படலாகா.

மகா வித்தியாதிபதி.

ஆசிரியர் கலாசாலைகள் கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
8.5.1970.

### மேற்குறித்த மாதிரிப் படிவம்

**பேராதனை இலங்கைப் பல்கலைக் கழகம், வித்தியோதய, வித்தியலங்கார பல்கலைக் கழகம் ஆகியவற்றில் 1970/71 ஆம் ஆண்டு நடைபெறும் கல்வித் தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிகளில் சேர்தற்கான விண்ணப்பம்**

1. (அ) முழுப்பெயர் : ————.
திரு./திருமதி/செல்வி/வண.
(ஆ) முதலெழுத்துகளுடன் பெயர் : ———— .

2. (அ) பிறந்த திகதி : ————.
1.1.70 அன்றுள்ளபடி வயது : வரு. மா. நாள்
(ஆ) ஆசிரியராகப் பதிவிலக்கம் : ———— .

3. விலாசம் : (i) அலுவலக : ————.
(ii) சொந்த : ————.

4. படித்த பல்கலைக் கழகங்கள் : ————.
(வரிசைக் கிரமத்தில்)

5. பட்டம் : பல்கலைக்கழகம் : வருடம் :
பகுதி : பொது/விசேட :
சித்தி/சிறப்பு : வகுப்பு/பிரிவு :
முதலாம்/இரண்டாம்/மூன்றும் பிரிவுச் சித்தி : ————.
பட்டப் பரீட்சைக்கான பாடங்கள் : ————.
பல்கலைக் கழகத்தில் போதனுமொழி : ————.

6. கல்வியிலும் வேறு யாதேனும் பாடசாலையில் அல்லது பின்னர் பெற்ற விசேட தகைமைகள் : ————.

7. தற்போதைய நியமனம் : ————.
அந்தஸ்து : அதிபர் தரம் I, II, III/உப அதிபர்/விசேட பதவி தரம் I, II, III உதவி ஆசிரியர், சிறப்பு பட்டதாரி/ பட்டதாரி.

8. (1) படிப்பித்தல் அனுபவம் : ————.
வருடம் : மாதம் : காலம் :

| பாடசாலைப் பெயர் | படிப்பித்த பிரதான பாடங்கள் | வகுப்புகள் | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |
| | | | |

(ii) பட்டம் பெற்றபின் வித்தியாதிபதி முகாமை/அரசினர் பாட சாலையில் 1.1.70 அன்றுள்ளபடி படிப்பித்தல் அனுபவம் : ———

9. ஆங்கிலத்தில் பெற்றுள்ள தகைமைகள் : ————.
சிங்களம்/தமிழ் மூலம் விண்ணப்பதாரி படிப்பிக்கக்கூடிய பாடங்களும் தரங்களும் : ——— – .
பாடம் : ————. அதியுயர்ந்த தரம் : ————

10. விண்ணப்பதாரிகள் திறமையைப் பாராட்டக்கூடிய விசேட படிப்புகள் அல்லது வெளியீடுகள் : ————.

11. விண்ணப்பதாரி பாடசாலையில் உதவி புரியும் வெளிவேலை முயற்சிகள் : ————.

12. பாடசாலைக்கு வெளியே விண்ணப்பதாரி பங்குபற்றிய சமூக முயற்சிகளும் நலன்புரி முயற்சிகளும் : ————.

13. தனது விண்ணப்பம் சார்பில் விசேட உரிமை கோர விண்ணப்பதாரி சமர்ப்பிக்க விரும்பும் யாதேனும் தகவல் : ————.

14. முன்னர் பெற்றுள்ள படிப்பு லீவு பற்றிய விபரங்களும் ஒப்பந்தக் காலமும் : ————.

15. விண்ணப்பதாரிக்கு எதிராக யாதேனும் ஒழுக்க நடவடிக்கை சம்பந்தமான விசாரணை முடிவுறாமல் இருக்கிறதா ? இருப்பின் அது பற்றிய விபரங்கள் : ——— —.

16. பரீட்சைக்கு எந்த மொழிமூலம் தோற்றுகிறீர் என்பதைக் குறிப்பிடுக : ————.

மேலே நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் சரியானவையென நான் உறுதியளிக்கின்றேன்.

—— ——,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

(விண்ணப்பதாரி கடமை புரியும் பாடசாலைத் தலைவருக்கூடாக இவ் விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்).

| |
|---|
| முத்திரை ஒட்டுதற்கான இடம் |

5–328—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### வெரகெரையிலுள்ள இலங்கை-ஜெர்மன் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சியர்களைச் சேர்த்தல்

வெரகெரையிலுள்ள இலங்கை–ஜெர்மன் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சியர்களைச் சேர்ப்பதற்காக நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சைக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்த்தரப்பட்டுள்ள மாதிரியான படிவமொன்றில் விண்ணப்பங்கள் செய்யப்பட்டு 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 5 ஆம் திகதியன்று அல்லது முன்னதாக எனக்கு கிடைக்கவேண்டும்.

2. விண்ணப்பதாரர் பின்வரும் ஆகக் குறைந்த தகைமைகளுடையவர்களாகயிருக்க வேண்டும் :—

(அ) **கல்வி :** VIII ஆம் தரத்தில் சித்தி.

**குறிப்பு:–** VIII ஆம் தரப் பரீட்சையில் பொது விஞ்ஞானத்தில் சித்தியடைந்திருத்தல் கூடிய ஓர் தகைமையாகவிருக்கும்.

(ஆ) **வயது** : 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் திகதியன்று 16 வயதுக்கும் 18 வயதுக்கும் இடப்பட்டவராக விருக்கவேண்டும்.

(இ) **ஆகக் குறைந்த உயரம்** : 4 அடி 10 அங்குலம்.

(ஈ) **மார்பின் சுற்றளவு** : 28 அங்குலம் (விரிவில்லாது).

3. விண்ணப்பதாரர் தாங்கள் எம் மொழியில் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகிறார்களெனக் குறிப்பிட்டு, தங்களுடைய விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகளல்ல) இணைக்க வேண்டும் :—

(அ) கல்வித் தகைமைகளுக்கு அத்தாட்சியாக, விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரர், பாடசாலைச் சான்றிதழை அல்லது இப்போது படித்துவரும் அல்லது கடைசியாகப் படித்த பாடசாலையின் அதிபரிடமிருந்து அல்லது தலைமையாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழை இணைக்க வேண்டும். இச் சான்றிதழ் விண்ணப்பதாரரின் குணத்தையும் உறுதிப்படுத்தவேண்டும்.

(ஆ) பிறப்புச் சான்றிதழை இணைக்கவேண்டும். (கல்விச் சட்டத்தின் தேவைக்கு வினியோகிக்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

4. வேண்டிய ஆகக் குறைந்த தகைமைகளுடைய விண்ணப்பதாரர்கள் பின்வரும் பாடங்களில் எழுத்துப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுவார்கள் :—

(அ) எண் கணிதம்
(ஆ) 1 ஆம் மொழி
(இ) 2 ஆம் மொழி
(ஈ) தொழில்நுட்ப விவேகப் பரீட்சை
(உ) உளச்சார்பரிசோதனை

5. இப் பரீட்சை கொழும்பு, காலி, கண்டி, அனுராதபுரம், பதுளை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடத்தப்படும். இப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் தங்களது விண்ணப்பங்களுடன், பரீட்சை சேர்வுக் கட்டணமாக 10/– ரூபாவுக்கான காசுக் கட்டளையொன்றையும் அனுப்பிவைக்க வேண்டும். காசுக் கட்டளையானது, **இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்தருக்கு** எனக் குறிப்பிடப்பட்டு கொழும்பு, தலைமைத் தபாற் கந்தோரில் பணம் பெறக்கூடியவாறு அனுப்பப்படல் வேண்டும். உருவழிந்த அல்லது மாற்றஞ்செய்த காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. பரீட்சார்த்திகள் தங்களது விண்ணப்பங்களில் தாங்கள் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சை நிலையத்தையும் குறிப்பிடவேண்டும்.

7. அரசாங்க அல்லது பதிவு பெற்ற வைத்திய உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வைத்தியச் சான்றிதழின் பிரகாரம் பரீட்சைக்குத் தோற்ற இயலாத சந்தர்ப்பங்களைத் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் சேர்வுக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. அவ்வித சந்தர்ப்பங்களில் கட்டணத்தின் ¾ வீதமே திருப்பிக் கொடுக்கப்படும். அவ்வித மீளளிப்புக்கான விண்ணப்பங்கள் பரீட்சை முடிந்த ஒரு மாத காலத்துக்குள் எனக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

8. பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், " போஸ்ட் மாஸ்டர் ஜெனரலால் " வழங்கப்பட்ட ஆளடையாள அட்டையை அல்லது பாடசாலைத் தலைவரினால் அல்லது சமாதான நீதியரசரால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படங்களை பரீட்சை மண்டபத்தில் காட்ட வேண்டும்

9. பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரரின் பயணச் செலவுகள் முதலியன கொடுக்கப்படமாட்டா.

10. இறுதியாகத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், பயிற்சி முடிந்த பின்பு ஆகக் குறைந்தது 5 ஆண்டு காலத்திற்குச் சபையின் சேவையில் கடமையாற்றுவதென்று ரூபா 1,000/– க்கு முறியொன்றை, இரண்டு பிணைநிற்போருடன் ஒவ்வொருவரும் ரூபா 1,000/– க்கு எழுதவேண்டுமென்று வேண்டப்படுவர்.

11. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர், மோட்டார் இயந்திரத் தொழில், கொல்லவேலை, காய்ச்சியிணைத்தல் வேலை, மோட்டார் மின்சார வேலை, கருவி இயந்திர வேலை ஆகியவற்றில் நாலாண்டு பயிற்சி நெறியில் சேர்ந்து பயிற்சிபெறுமாறு வேண்டப்படுவர். சபையின் தேவைக்கேற்ப அவர்களுக்கு ஓர் குறித்த துறையில் விசேட பயிற்சியளிக்கப்படும்.

12. பயிற்சி தொடங்கிய ஆறு மாத காலத்தின் பின், பயிற்சியாளர்கள் தொடர்ந்தும் தொழில் பயில்வதற்குத் தகுதியுடையரோவென ஆய்ந்தறிவதற்காக எழுத்துப் பரீட்சையொன்றும், செய்முறைப் பரீட்சையொன்றும் நடத்தப்படும். தேவையான தராதரத்தை அடையத் தவறும் பயிற்சியர்கள் தொடர்ந்தும் தொழில் பயில்வதற்கு அனுமதிக்கப்படாது அவர்களின் தொழிற்பயிற்சி முடிவடையச் செய்யப்படும்.

13. பயிற்சிக் காலத்தில் கொடுக்கப்படும் படிகள் பின்வருமாறு :—

1 ஆம் ஆண்டு — ரூபா 1.50 நாளொன்றுக்கு
2 ஆம் ஆண்டு — ரூபா 1.75 நாளொன்றுக்கு
3 ஆம் ஆண்டு — ரூபா 2.00 நாளொன்றுக்கு
4 ஆம் ஆண்டு — ரூபா 3.00 நாளொன்றுக்கு

14. தகவுடைய பரீட்சார்த்திகள் மாத்திரமே பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. எல்லா விண்ணப்பங்களையும், ஆளணி முகாமையாளர், இலங்கைப் போக்குவரத்துச் சபை, 200 கிருல வீதி, கொழும்பு 5, என விலாசமிட்டு பதிவுக் கடிதமூலமாக அனுப்பிவைக்கவேண்டும். விண்ணப்பங்கள் உள்ளடக்கப்பட்ட உறைகள்மீது—இளை " சி " எனக் குறிப்பிடவேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200 கிருல வீதி,
கொழும்பு 5,
6, ஏப்ரில், 1970.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

**வெரகெரையிலுள்ள இலங்கை ஜெர்மன் பயிற்சிப் பாடசாலையில் சேர்வதற்கான விண்ணப்பம்.**

1. முழுப் பெயர் : ———— .
(கொட்டை எழுத்தில்)
(அ) குடும்பப் பெயர் : ———— .
(ஆ) வேறு பெயர்கள் : ———— .
2. தபால் விலாசம் : ————.
3. (அ) பிறந்த தேதி : ————.
(பிறப்புச்சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
(ஆ) 1.11.1970 இல் சரியான வயது : ————.
வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :
4. நாட்டினம் : ————.
5. **கல்வித் தகைமைகள் :**
சித்தியடைந்த ஆகக் கூடிய வகுப்பு—
(i) சிங்களத்தில்
(ii) தமிழில்
(iii) ஆங்கிலத்தில்
(பாடசாலைச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
6. பரீட்சார்த்தி பரீட்சை எடுக்க விரும்பும் **மொழியும், நிலையமும் :——**
7. **VIII** ஆம் வகுப்பில் பொது விஞ்ஞானத்தில் சித்தியெய்தியிருந் தால் : ————.
8. (அ) உயரம் : ————.
(ஆ) மார்பின் சுற்றளவு : ————.
9. காசுக் கட்டளையின் இலக்கமும் தபாற் கந்தோரும் : ————.

(விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டிய காசுக் கட்டளையானது இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்த ருக்கு எனக் குறிப்பிட்டு, கொழும்பு, தலைமைத் தபாற் கந்தோரில் பணம் பெறக்கூடியதாக இருத்தல் வேண்டும். உருவழிந்த அல்லது மாற்றப்பட்ட காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)..

நான் மேற்கொடுத்த விபரங்கள் உண்மையானவையென்றும் சரியான வையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். நான் கொடுத்த விபரங் கள் பொய்யானவை அல்லது சரியில்லாதவையெனத் தெரிவிற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் தகைமை நீக்கம் செய்யப்படவும் நியமனம் செய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் வேலையிலிருந்து நீக்கப்படவும் ஏதுவாயிருப்பேன் என்பதை யான் அறிவேன்.

————
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

தேதி : ————.

5–340—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

எனது இல. ரி ஆர்/6/140

## அரசாங்க நிதி முகாமையில் டிப்புளோமா

நிருவாகக் கல்விக் கழகம் அரசாங்க முகாமையில் டிப்புளோமாப் பட்டம் அளிப்பதற்காக ஒரு பரீட்சை நடாத்தும்; இப் பரீட்சையை இலங்கை நிருவாக சேவையிலுள்ள உத்தியோகத்தர் யாவரும் அரசாங்க சேவையி லுள்ள பிற முகாமைத் தரங்களிலுள்ளோரும் எடுக்கலாம்.

இப் பரீட்சைக்கு ஐந்து கட்டாய வினாப்பத்திரங்களும் ஒரு விருப்புரிமைப் பத்திரமும் பின்வருவனவற்றிலுண்டு :—

**கட்டாய வினாப்பத்திரங்கள் :**

1. கொள்கை உருவாக்கல்.
2. நிருவாக நோக்கமும் இயல்பும்.
3. முகாமையும் அமைப்பும்.
4. நிருவாகச் சட்டம்.
5. முகாமைப் பொருளாதாரம்.

**விருப்புரிமை வினாப்பத்திரங்கள் :**

1. உற்பத்தி, வழங்கல் முகாமை.
2. நிதி முகாமை, திட்ட மதிப்பீடு.
3. சமூக, சமுதாய அபிவிருத்தி முகாமை.
4. ஆளணி முகாமை.

குறித்த நிருவாகக் கழகம் ஒவ்வோராண்டும் அரசாங்க முகாமையில் பற்பல தீவிர பயிற்சி நெறிகள் நடாத்தும். இப்பரீட்சைக்கு ஆயத்தப்படுத் தும் அரசாங்க சேவையாளருக்கு இப்பயிற்சி நெறிகள் உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவை, இதில் பங்குபற்றுவோரின் முகாமை முறைகள் பற்றிப் பொது விளக்கத்தை உயர்த்தி, அவர்கட்கு முகாமை பற்றிய தற்கால கருவிகளையும் தொழில்நுட்பங்களையும் பழக்கி, அர சாங்க முகாமை பற்றிய அடிப்படை அறிவையளிக்கும் நோக்குடையன.

1970.7.1 ஆந் தேதி தொடங்கப்படவுள்ள முதற் பயிற்சி நெறி இலங்கை நிருவாக சேவையின் V ஆம் வகுப்பிலுள்ள சிரேட்ட உத்தி யோகத்தர்களுக்குள்ளது. மாதிரிப் படிவத்தில் அமைந்த விண்ணப்பங் கள் நிருவாகப் பணிப்பாளரை 1970.5.30 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ வந்தடையத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும்.

எச். எஸ். வனசிங்கா,
நிருவாகக் கல்விப் பணிப்பாளர்,
நிருவாகக் கல்விக் கழகப் பணிப்பாளர்.

## நிருவாகக் கல்விக் கழகம்

**அரசாங்க முகாமையில் டிப்புளோமா பெறுவதற்கு விண்ணப்பப் படிவம்**

**1970 யூலை—ஓகத்து**

**பகுதி**

(பரீட்சார்த்தி நிரப்புதல் வேண்டும்)

1. முழுப் பெயர் :————.
(குடும்பப் பெயரின் கீழ்க் கீறிடுக) பெரிய எழுத்தில்
2. வயது :————. பிறந்த தேதி :————.
3. திணைக்களம் :————.
4. பதவிப் பெயர் :————.
5. கல்வித் தகைமைகள் :————.
(பட்டக் கல்விக்கு அல்லது டிப்புளோமாவுக்குப் படித்த பாடங்களும் பெற்ற பட்டங்கள், டிப்புளோமா, சான்றிதழ் ஆகியனவும்)
6. பயிற்சி நெறிகள், ஆய்வரங்குகள், கருத்தரங்குகள், பிற தொழில் முறைப் பயிற்சிகள் பற்றிய விவரங்கள் :————.
7. முகவரியும் தொலைபேசி இலக்கமும் :————.

.............................................. ஆகிய நான்
(முழுப் பெயர்)
இங்கு கொடுத்துள்ள கூற்றுக்கள் எனது நம்பிக்கைக்கெட்டிய வரையில் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நம்புகின்றேன்.

நான் பயிற்சி பெறுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டால், நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளரால் குறிப்பிடப்படும் அத்தகைய அறிவுறுத்துரை கட்டும் நிபந்தனைகட்குமிணங்கி ஒழுகுவேன்.

————,
கையொப்பம்.

தேதி :————.

**பகுதி II**

திரு. ........................................ என்பவர் தேர்ந் தெடுக்கப்பட்டால், பயிற்சி நெறிக்குச் செல்வதற்கு முழுச் சம்பளத்துடன் விடுவிக்கப்படுவர். அன்றியும் இக்காலத்தில் அவருக்கு எவ்வித கட மையோ வேலையோ கொடுக்கப்படமாட்டாது.

நியமிக்கும் அதிகாரியின்,
கையொப்பமும் பதவிப் பெயரும்.

5–343—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## தபாற் தந்திப் பகுதி

### உருக்கு கார்ட் கெபினட் விநியோகித்தல்

நாராஹேன்பிட்ட, உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்திலுள்ள மாதிரிப்படம், அளவுப் பிரமாணம் ஆகியவற்றின் படி உருக்கு கார்ட் கெபினட் விநியோகிப்பதற்கு கேள்விப்பத்திரங்கள், கொழும்பு, தபால் தந்திப்போக்குவரத்துத் தலைமை அலுவலகக் கட்டடத்திலுள்ள பெரும்பாகக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ம் திகதி மு. ப. 10.00 மணி வரை உள்ளூர் தயாரிப்பாளர்களிடமும், விநியோகத்தர்களிடமுமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் 1970 ஜூன், 1 ம் திகதி மு. ப. 10.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்விப்பத்திரதாரர்கள் சமுகமளிக்க அனுமதியளிக்கப்படுவர்.

3. கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள தபால் தந்திப் போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்தில் பெற்ற பத்திரங்களில் அனுப்பப்படல் வேண்டும்.

4. கொழும்பு 1, பி. த. க. விசாரணைகள் செய்யும் 4 ம் கரும பீடத்தில் கேள்விப்பத்திரப் பொறுப்புப் பணமாக ரூபா 50 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பதாரருக்கே கேள்விப்பத்திர சாதனங்கள் 1970 ம் ஆண்டு மே மாதம் 15 ம் திகதி தொடக்கம் மே மாதம் 30 ம் திகதி வரை அலுவலக நேரங்களில் வழங்கப்படும்.

5. மேலதிக விபரங்கள், கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேணன் எம். அபேசேகர,
அஞ்சல் அதிபர் நாயகமும்
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

த. த. தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

5–331—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## தபால் தந்தித் தொலைபேசித் திணைக்களம்

### விசேஷ கடித உறைகள் வழங்கல் 1969–70

விசேஷ கடித உறைகள் வழங்கலுக்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 1, தபால் தந்தித் தலைமை அலுவலகத்திலுள்ள திணைக்களக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 2 ம் திகதி மு. ப. 10.00 மணி வரை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

2. 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 2 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரதாரர், கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் போது பிரசன்னமளிக்க அனுமதிக்கப்படுவர்.

3. கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சக (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் பத்திரங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் அனுப்புதல் வேண்டும்.

4. கொழும்பு 1, பிரதம அஞ்சல் அலுவலகத்திலுள்ள 4 ம் இலக்கக் கருமபீடத்தில் வைப்புப் பணமாகக் கட்டும் 50 ரூபாவுக்குரிய பற்றுச்சீட்டைக் கொடுத்து, 1970 மே மாதம் 15 ம் திகதி தொடக்கம் 1970 மே மாதம் 30 ம் திகதி வரை அலுவலக நேரங்களில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

5. கடித உறைகள் செய்வதற்குத் தேவையான மூலப்பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் உள்ளவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இது சம்பந்தமாக எதுவிதமான இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் பெறுவதற்கும் இத்திணைக்களம் அத்தாட்சிப் படுத்தமாட்டாது.

6. மேலும் விபரங்கள், கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேணன் எம். அபேசேகர,
தபால் கந்தோர்கள் தலைமை அதிபதியும்
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

தபால் தந்தித் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

5–330—15.5.70 திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## தபாற் தந்திப் பகுதி

### டெராஸோ மேசை விநியோகித்தல்

நாராஹேன்பிட்டி, உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்திலுள்ள மாதிரிப்படம், அளவுப்பிரமாணம் ஆகியவற்றின்படி டெராஸோ மேசைகள் விநியோகிப்பதற்கு கேள்விப்பத்திரங்கள், கொழும்பு, தபால் தந்திப் போக்குவரத்து கட்டடத்திலுள்ள பெரும்பாகக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ம் திகதி மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் 1970, ஜூன் 1 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரதாரர்கள் சமுகமளிக்க அனுமதியளிக்கப்படுவர்.

3. கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்தில் பெற்ற பத்திரங்களில் அனுப்பப்படல் வேண்டும்.

4. கொழும்பு 1, பி. த. க. விசாரணைகள் செய்யும் கருமபீடத்தில கேள்விப்பத்திரப் பொறுப்புப்பணமாக ரூபா 50 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்களுக்கே கேள்விப்பத்திர சாதனங்கள் 1970, மே மாதம் 15 ம் திகதி தொடக்கம் மே மாதம் 30 ம் திகதி வரை அலுவலக நேரங்களில் வழங்கப்படும்.

5. மேலதிக விபரங்கள், கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேணன் எம். அபேசேகர,
அஞ்சல் அதிபர் நாயகமும்
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

த. த. தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

5–332—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

## தபால் தந்திப் பகுதி

### பித்தளைப் பொறிகளும் திகதி முத்திரையச்சுக்களும்

கொழும்பு 1, தபாற் தந்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகத்தி லுள்ள பெரும்பாகக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1970ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ம் திகதி மு. ப. 10.00 மணிவரை கீழ்வரும் சேவை களுக்காக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(அ) அஞ்சல் அலுவலகங்கள் அல்லது உப அஞ்சல் அலுவலகங்களின் பெயர்களை செதுக்குவதற்கும், அவை பாவனை செய்யப்படும் வேலையின் விபரங்களைச் சுருக்கமாக அவற்றில் செதுக்குவதற்கும்.

(ஆ) உலோகத் திகதி முத்திரையச்சுக்களில் அஞ்சல் அலுவலகங்கள் அல்லது உப அஞ்சல் அலுவலகங்களின் பெயர்களைப் புடைக்கச் செதுக்குவதற்கும், அவை பாவனை செய்யப்படும் வேலையின் விபரங்களைச் சுருக்கமாக அவற்றில் செதுக்குவதற்கும்.

2. 1970 ஜூன், 1 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்தி ரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விப்பத்திரதாரர்கள் சமுகமளிக்க அனுமதியளிக்கப்படுவர்.

3. கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலம்புரி, களஞ்சியம்) அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பத்திரங்களில் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

4. கொழும்பு 1, பி. த. க. விசாரணை செய்யும் 4 ம் இலக்கக் கரும பீடத்தில் கேள்விப்பத்திர வைப்புப்பணமாக ரூபா. 50/- கட்டிப்பெற்ற பற்றுச் சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர சாதனங்கள் 1970 மே மாதம் 15 ம் திகதி தொடக்கம் மே 30 ம் திகதி வரை அலு வலக நேரங்களில் வழங்கப்படும்.

5. மேலும் விபரங்கள் கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேணன் எம். அபேசேகர.
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும்.

த. த. த. அலுவலகம்,
கொழும்பு.

5–335—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## அஞ்சல் தந்தித் திணைக்களம்

யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்திற்கு ஒரு மதில் சுவர் கட்டுவதற்காக, கொழும்பு, அ. த. தலைமை அலுவலகத்தில், மேலதிக மாவட்ட கேள் விப்பத்திரசபைத் தலைவரால் கேள்விப்பத்திரங்கள் 1.6.70 ந் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இத் திணைக்களத்திலும் ஏனைய அமைப்புத் திணைக்களங்களிலும், 10,000 ரூபாய்க்குக் கூடுதலான வேலைகளைக் கையாளும் பதிவுசெய்யப் பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தே கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப் படும்.

3. எந்த அஞ்சல் அலுவலகத்திலேனும் கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 25/- கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து 26.5.70 ம் திகதி மு. ப. 10.00 மணிவரை, யாழ்ப்பாண (வட) அஞ்சல் அலுவல கங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெற்ற படிவங்களில், இரட்டைப் பிரதிகளில் கேள்விப்பத்திரங்களை விண்ணப்பித்தல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரத்தின் உறையின் இடக் கைப்பக்க மேல் மூலையில் "யாழ்ப்பாண அஞ்சல் அலுவலகத்திற்கு ஒரு மதில் சுவர் கட்டுவதற் கான கேள்விப்பத்திரம்" என குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

5. கொழும்பு, அ. த. தலைமை அலுவலகம், மேலதிக மாவட்ட கேள்விப்பத்திர சபைத் தலைவர், அவர்கட்கு என முகவரியிடப்பட்டு பதிவு அஞ்சலில் கேள்விப்பத்திரங்கள் அனுப்பிவைத்தல் வேண்டும்.

6. மேலதிக விபரங்களும் நிபந்தனைகளும் யாழ்ப்பாண (வட) அஞ் சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேணன் எம். அபேசேகர,
தபால் கந்தோர்கள் தலைமை அதிபதியும்
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

5–338—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## இலங்கை அரச விமானப் படை

1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 30 ந் திகதி வரை கீழ்க்காணும் பொருட்களை விநியோகஞ்/சேவை செய்வதற்கு பொறியிட்ட கேள்விகள் கோரப்படு கின்றன. இக் கேள்விகள் இதன் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகளில் முற்பகல் 10 மணி வரை கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத் தையிலுள்ள இலங்கை அரச விமானப்படைத் தலைமைக்காரியாலயத் திலிருக்கும் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| (1) விநியோகஞ்/சேவை | (2) கேள்வி முடிவடையும் திகதி | (3) கேள்விப்படிவங்கள் கொடுக்கப்படும் முடிவு நாள் |
|---|---|---|
| 1. கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை அரச விமானப்படையினர்க்கு மரக்கறி, தேங்காய், பண்ணைப் பிரயோசனங்களை விநியோகித்தல் .. | 15.6.1970 .. | 14.6.1970 |
| 2. கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை அரச விமானப்படையினர்க்கு இறைச்சி விநியோகித்தல் | 15.6.1970 .. | 14.6.1970 |
| 3. கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை அரச விமானப்படையினர்க்கு பாண் தேசிய காலை உணவுகள் விநியோகித்தல் .. .. | 15.6.1970 .. | 14.6.1970 |
| 4. தியத்தலாவையிலுள்ள இலங்கை அரச விமானப்படையினர்க்கு பாண் தேசிய காலை உணவுகள் விநியோகித்தல் .. .. | 16.6.1970 .. | 15.6.1970 |
| 5. கொழும்பு, கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை அரச விமானப்படையினரின் உத்தியோக உடைகள், பாசறைத் துணிகள் சலவை செய்தல் .. .. | 16.6.1970 .. | 15.6.1970 |
| 6. கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை அரச விமானப்படை ஆசுபத்திரியின் மருத்துவத் துணிகளைச் சலவை செய்தல் .. | 16.6.1970 .. | 15.6.1970 |
| 7. கட்டுநாயக்கா, சீனக்குடா, தியத்தலாவை ஆகியவிடங்களிலுள்ள இலங்கை அரச விமானப்படையினரின் மெத்தைகள், தலையணைகள், இருக்கைகள் புதுக்கியமைத்தல் .. | 17.6.1970 .. | 16.6.1970 |
| 8. கட்டுநாயக்கா, சீனக்குடா, தியத்தலாவை ஆகிய இடங்களிலுள்ள இலங்கை அரச விமானப்படையினரின் உத்தியோக உடைகள், மெத்தை விரிப்புக்கள், கூடாரங்கள் முதலியன பழுதுபார்த்து திருத்தியமைத்தல் .. | 17.6.1970 .. | 16.6.1970 |
| 9. கட்டுநாயக்க, சீனக்குடா, தியத்தலாவை ஆகிய இடங்களிலுள்ள இலங்கை அரச விமானப்படையினரின் பாதணிகள் பழுதுபார்த்துக் கொடுத்தல் .. | 21.6.1970 .. | 20.6.1970 |
| 10. கட்டுநாயக்கா, சீனக்குடா, தியத்தலாவை ஆகிய இடங்களிலுள்ள இலங்கை அரச விமானப்படையினர்க்கு கட்டிடப் பொருட்கள் விநியோகித்தல் .. .. | 21.6.1970 .. | 20.6.1970 |

திருப்பிக்கொடுக்கப்படும் கேள்விக்கட்டுப்பணம் ரூபா 75 ஐ தனித் தனி ஒவ்வொரு விநியோகஞ்/சேவைக்கு கொழும்பு, பாசன் வீதி, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள இலங்கை அரச விமானப் படைத் தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன அதிகாரியும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம் கட்டிய பின்னரே கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும். மேற்கூறப்பட்ட விநியோக/சேவைக்கான கேள்விப் படிவங்கள் 3 ம் பகுதியில் குறிக்கப்பட்டுள்ள திகதிகளில் நண்பகல் 12 மணி வரை வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை கொழும்பு பாசன் வீதி, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள விமானப்படைத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஈ. ஆர். அமரசேகர,
எயர் உவையிஸ் மார்ஷல்,
விமானப்படைத் தலைவர்.

5–301—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

எனது இல. எல்டபிள்யூ/2/26

## கேள்வி அறிவித்தல்

அரசாங்கத்தில் ரூ. 15,000 க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்துள்ள தனிப்பட்ட கொந்திருத்துக்காரர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆதியனவற்றிலிருந்து, கீழ்க்காணும் வேலைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது ஒன்றுக்குமேற்பட்ட வேலைகளையோ செய்வதற்கான கேள்விகள், 1970 ம் ஆண்டு ஆனி மாதம் 6 ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி வரை புத்தளம் கச்சேரி, கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. பொதுக்கிணறு—நாத்தாண்டிய, அக்கரஅகுவ, தப்பொலவில்
2. ஷை —நாகாகட்டுவ கி. வி. திட்டத்தில்
3. ஷை —பாலுவத்தை கி. வி. திட்டத்தில்
4. ஷை —மட்டாக்கொட்டுவ கடற்கரையில் மீ. இ. திட்டத்தில்
5. ஷை —தல்வில மீ. இ. திட்டத்தில்
6. ஷை —பகலகட்டுநேரிய மீ. இ. திட்டத்தில்
7. ஷை —நெபடககாயாய கி. வி. திட்டத்தில்
8. ஷை —தொடுவாவ மீ. இலாகாத் திட்டத்தில்
9. ஷை —பொத்துக்குளம்–கலுகெல்ல, நிக்கவெறடிய தேர்தல் தொகுதியில்
10. ஷை —சேருக்கெலே–முதலக்குளியாவில்
11. ஷை —வேண்டகடுவ–பல்லமவில்
12. ஷை —கல்குளிய மத்தியவகுப்பினர் காணித் திட்டத்தில்
13. பொதுக்கிணறு—அம்பக்கெலே கி. வி. திட்டம், சிலாபத்தில்
14. ஷை —அத்தங்கனே கி. வி. திட்டத்தில்
15. ஷை —வெட்டாளை கி. வி. திட்டத்தில்
16. லொறி கராஜ் —புத்தளக் கச்சேரி மைதானத்தில்

2. கேள்விகள் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறக்கூடிய படிவங்களில் மட்டுமே மேலே கூறப்பட்ட ஒவ்வொரு வேலைகட்கும் தனித் தனியாக இவ்விரு பிரதிகளில் நிரப்பப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். புத்தளம் கச்சேரியில் ரூபா 25 வைப்புப்பணமாகக் கட்டிய பற்றுச் சீட்டைக் காண்பித்தே மேற்கூறிய ஒவ்வொரு வேலைக்குமான கேள்விப் பத்திரம் பெறமுடியும். கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஆனி மாதம் 5 ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை விநியோகிக்கப்படும். கேள்விகள் சம்பந்தமான ஏனைய விபரங்களும் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறமுடியும்.

3. கேள்விகள் புத்தளம் கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படலாம். இன்றேல் பதிவுத்தபால் மூலம், தலைவர், கேள்விச் சபை, கச்சேரி, புத்தளம், என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

எம். டபிள்யு. எஸ். குணரத்ன,
அரசாங்க அதிபர், புத்தளம்.

கச்சேரி, புத்தளம்,
1970 ம் ஆண்டு வைகாசி மாதம் 6 ந் திகதி.

5–300—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## கச்சேரி, பொலன்னறுவை

கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட அமைப்பு வேலைக்காக 1970 ம் ஆண்டு மே மாதம் 30 ம் திகதி காலை 10.00 மணி வரைக்கும் பொலன்னறுவை மாவட்ட அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப் பத்திரங்களும், முத்திரையிடப்பட்டு (சீல்) பதிவுத் தபாலில், மாவட்ட அதிபர் பொலன்னறுவைக்கு அனுப்பப்பட வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படாத கேள்விப்பத்திரங்களை நேர்முகமாக எடுத்துச் செல்லப்பட்டு, பொலன்னறுவைக் கச்சேரியின் உதவித் திணைக்கள அதிபரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கப்பட வேண்டும். கடித உறையின் மேல், குறிப்பிட்ட கேள்விப் பத்திரத்திலுள்ள வேலையின் விபரம் காட்டப்படவேண்டும். தனித்தனியான வேலைக்கு வெவ்வேறான கேள்விப்பத்திரம் அனுப்பப்படவேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் பொலன்னறுவைக் கச்சேரியிலிருந்து பெறக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட படிவங்களில் ரூபா 25/– கொண்ட கட்டுப்பணத்துடன் அனுப்பப்படவேண்டும்.

4. கேள்விப்பத்திரங்களை பொலன்னறுவைக் கச்சேரியில் 1970 ம் ஆண்டு மே மாதம் 29 ம் திகதி பி. ப. 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

5. கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு மே மாதம் 30 ந் திகதி மு. ப. 10.30 மணிக்கு பொலன்னறுவைக் கச்சேரியில் வைத்து கேள்விப் பத்திரக் குழுவினரால் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் அனுப்புபவர்களோ அல்லது அவர்களால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளோ அனுமதிக்கப்படுவர். கேள்விப்பத்திரம் திறக்கப்பட்டதும் விண்ணப்பகாரரின் பெயரும், அவரால் கேட்கப்பட்ட தொகையும், கேள்விப்பத்திரக் குழுவினரால் அறிவிக்கப்படும்.

6. அங்கீகரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களில் அனுப்பப்படும் கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்வித்தொகை எழுத்திலும், எண்ணிலும் கேள்விப்படிவத்தில் காட்டப்படவேண்டும். எழுத்தில் காட்டப்பட்ட தொகையும், எண்ணிலுள்ள தொகையும் வித்தியாசப்படின் கேள்விப்பத்திரம் அங்கீகரிக்கப்படமாட்டாது.

7. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள், கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் அல்லது மறுப்பின், தனது கேள்விப்பத்திர வைப்புப் பணத்தை இழக்க நேரிடும். ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல், கேள்விப் பத்திரக்காரருக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டால், அது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

8. கேள்விப்பத்திரங்களனைத்தையும் நிராகரிக்கவோ அல்லது அவற்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ள பொலன்னறுவை மாவட்ட அதிபருக்கு உரிமையுண்டு.

9. கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதப்பட்ட இடங்களும் பிழை திருத்தப்பட்ட இடங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

10. பொலன்னறுவை மாவட்ட அதிபரிடமிருந்து முன்னமே எழுத்து மூலம் வழங்கப்பட்ட அனுமதியின்றி கொந்தராத்தை வேறு ஒருவருக்கு மாற்றவோ குத்தகைக்குக் கொடுக்கவோ கூடாது.

11. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர், கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 10 வீதத்தை பிணைப்பணமாக பொலன்னறுவைக் கச்சேரியில் கட்ட வேண்டும். கச்சேரியில் குறிப்பிட்ட பணம் செலுத்தப்பட்ட பின்பே ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

12. கேள்விப்பத்திரங்கள் பெறுவோர், பொலன்னறுவைக் கச்சேரியிலிருந்து பெறும் விண்ணப்பப்படிவங்களை நுட்பமாய் வாசித்து, அதில் தேவைப்படும் விளப்பங்களிருப்பின், அவற்றை பொலன்னறுவைக் கச்சேரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

13. ஒவ்வொரு கேள்வி விண்ணப்பப்பத்திரத்துடனும், தகுதியுள்ள இரண்டு பிணையாளரிடம், பிரஸ்தாப வேலைகள் நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கமைய முடித்துக்கொடுக்கப்படும் என்ற கடிதமும் அணைக்கப்பட வேண்டும்.

14. தெரிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர் இலங்கையரையே குறிப்பிட்ட இவ்வேலைக்கு அமர்த்த வேண்டும்.

15. (அ) கூட்டுறவுச் சங்கங்களால் அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்களுடன் உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி அதிகாரியினால் சங்கத்தின் பொருளாதாரத் தகுதியையும் அச்சங்கத்தின் சேமிப்பு வங்கியிலுள்ள சேமிப்பையோ அல்லது வேறு ஸ்தாபனங்களில் உள்ள சேமிப்பு விபரங்களையோ காட்டும் கடிதமும் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

(ஆ) தனிப்பட்டோரிடமிருந்து அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்களுடன் அப்பகுதி காரியாதிகாரியினால், குறிப்பிட்ட நபர் இக்கொந்தராத்தை ஏற்கும் தகுதி நிறைந்தவரென்றும், அவரது சேமிப்பு வங்கியின் கணக்கு முதலியனவற்றை குறிப்பிட்டுப் பெற்ற கடிதமொன்றும் அணைக்கப்படவேண்டும்.

16. மாவட்ட அதிபர் தனிப்பட்டோரிடமிருந்தோ அல்லது சங்கங்களிடமிருந்தோ பெற்ற கேள்விப்பத்திரங்களை, அவை அவரது அபிப்பிராயத்தின்படி பொருளாதாரத் தகுதியற்றவையெனக் கருதின் நிராகரிக்கும் உரிமையை தனதாக்கிக் கொண்டுள்ளார்.

17. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வேலைகளுக்கோ கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கலாம்.

எ. பி. ஜி. ஜயசேகர,
மாவட்ட அதிபருக்காக,
பொலன்னறுவை.

கச்சேரி,
பொலன்னறுவை,
7.5.70.

### அட்டவணை

1. உள்நாட்டு அமைச்சரின் விடுதி இல. 3—எ1, புது நகரம், திருத்துதல்.

5–303—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

## நீர்ப்பாசனத் திணைக்களம்—மாத்தளை உப பிரிவு

பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் நத்தாரம்பொத்த குண்டசாலையில் உள்ள மத்திய மகாண பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமை 10 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப் படும். அதன்பின் உடனே திறக்கப்படும்.

அவ்வவ் வேலைக்கு எதிரே காட்டப்பட்டுள்ள அல்லது அவைக்கு மேற் பட்ட தொகைக்கு நீர்ப்பாசன திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள கொந் தராத்துக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமாவிருத்திச் சங்கங்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகைமையுடையவராவர்.

| கேள்வி இல. | வேலை விபரம் | பதிவுத் தொகை | கேள்விப் பத்திரக்கட் டணம் |
|---|---|---|---|
| 1. | வவ்வத்தள குளம் புணருத் தாருண வேலை குளக்கட்டு மண்வேலை மட்டும் .. | ரூ. 57,000 .. | ரூ. 100.00 |
| 2. | வெள்ள அழிவு திருத்து வேலை–குடாகோணகுளம் .. | 37,000 .. | 50.00 |

கேள்விப்பத்திரங்கள் மாத்தளை உப–நீர்ப்பாசன அலுவலகத்தில் அலு வலக நேரங்களில் 1970 ஆம் ஆண்டு மே, மாதம் 22 ஆம் திகதி முதல் யூன் மாதம் 9 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாள ராக முன்வருபவர் தமது பதிவுப் புத்தகத்துடன் இப்போது திணைக் களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களை அவற்றின் பெறு மதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி அவ்வேலைகளுக்குப் பொறுப் பாக உள்ள அதிகாரிகளிடமிருந்து வேலைகள் முறையே நடைபெறு கின்றனவா என்று அறிவதற்காகிய பத்திரங்களும் பெற்று அனுப்புதல் வேண்டும்.

இவ் வேலைகள் இயந்திரங்களின் உதவி கொண்டே செய்ய வேண்டி இருப்பதால் கேள்வியாளர்கள் தம்மிடமுள்ள இயந்திரங்களின் விபரங் களை ஒரு பத்திரத்தில் வெளியிடுதல் வேண்டும். இவ்வேலைக்காய இயந் திரங்களைக் கொண்டுள்ள தகுதி வாய்ந்த கேள்வியாளர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரக் கட்டணமாக மேல் கூறியுள்ள தொகையை இக்காரியா லயத்திலோ அல்லது ஏதாவது கச்சேரியிலோ செலுத்திய பற்றுச் சீட்டு டனே இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். மேற் கூறிய சங்கங்கள் கேள்விக்கட்டணம் செலுத்தத் தேவைப்படாது.

மேலதிக விபரங்கள் மாத்தளை உபபிரிவு நீர்ப்பாசன அலவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க. கனகலிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மாத்தளை உபபிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்
மாத்தளை 29.4.70.

5-159—1079—15.5.70 ந் திகதிய வர்த்தமானி. இல. 14,906

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்—கொழும்பு உப பிரிவு

கீழே சொல்லப்பட்ட வேலைகளுக்கான கேள்விப் பத்திரம் கொழும்பு 5, ஜாவத்த வீதியிலுள்ள மேற் பிரிவு பெரும்பாக பொறியியலாளர் அவர் களால் 1970ம் ஆண்டு ஜூன் மாதம் 14 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனே திறக்கப்படும்.

2. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வேலைக்கு நேராக உள்ள தொகைக் கோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ நீர்ப்பாசனத் திணைக் களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங் களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களுமே இவ்வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் சமர்பிக்கத் தகுதியுடையவராவர்.

| வேலையின் பெயர் | ஒப்பந்தக்கார ரின் பதிவுத் தொகை | கேள்விக் கட்டணம் |
|---|---|---|
| பூகொட சிறு வெள்ளப் பாதுகாப் புத் திட்டத்திற்குச் சீர்திருத்தம் செய்தல் .. | ரூ. 50,000 .. | ரூ. 50 |

3. இக்கேள்விக்காக வெற்றுப் பத்திரம் கொழும்பு, கழுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி ஆகிய உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர் களின் காரியாலயங்களில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 11 ம் திகதிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விக்காரர்களாக முன் வருவோரைக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தகுதியுடைய வர்களா அல்லவா என்று ஆராய்ந்தறியும் பொருட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குத் தங்கள் பதிவுப் புத்தகத்துடன், தாங்கள் தற் போது திணைக்களத்தில் மேற் கொண்டுள்ள வேலைகளையும் அவைகளின் பெறுமதிகளையும் ஓர் பத்திரமூலம் கேள்விக்காரர்களாக வருவோர் வெற்றுப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் பெறுமுன் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 11ம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அலுவலக நேரத்தில் மேற்கூறிய கேள்விக் கட்டணத்தை நீர்ப்பாசனப் பொறியிய லாளரின் காரியாலயத்தில் கட்ட வேண்டும் அல்லது ஒரு கச்சேரியில் கட்டிய பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேற்படி வேலைகளைப் பற்றிய படங்களையும் வேறு தேவையான விபரங்களையும் அலுவலக நேரங்களில் கொழும்பு உப பிரிவு நீர்ப்பா சனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜ. எச். பெரேரா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கொழும்பு உப பிரிவு.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
ஜாவத்த வீதி,
கொழும்பு 5.
3.5.70

5-228—15.5.70 ஆந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### நூல்நிலையப் புத்தகங்கள் விநியோகம், 1969–70

நூல்நிலையப் புத்தகங்கள் விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் 1970 ஆம் ஆண்டு ஆனி மாதம் 6 ஆந் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். அவைகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்தில் மேலுள்ள 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று, விதிக்கப்பட்ட நேரம் திறக்கப் படும்.

3. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்தில் (விநியோகக் கிளையிலிருந்து) 1970 ஆம் ஆண்டு ஆனி மாதம் 5 ஆந் திகதி பி. ப. 4.30 மணிவரை பெறற்பாலன வான படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

4. சகல கேள்விகளும் இணைப்படியில் தயாரிக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் காகித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் " நூல்நிலையப் புத்தகங்கள் விநியோகம்–1969/70 " என அடையாளமிடப்படவேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் அஞ்சல் மூலம் பதிவு செய்து அனுப்பப் படலாம். உள்ளூர்க் கேள்வியாளர் ஒருவர் தனது கேள்விப் பத்திரத்தை மேற்குறித்த முறையில் அனுப்ப விரும்பாவிடின், காகித உறையில் வைத்து முத்திரை பொறிக்கப்பட்ட தனது கேள்விப் பத்திரத்தை கேள்வியாளர் அல்லது அவருடைய முகவர் (காகித உறையின் மேல் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளமும் கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபட வேண்டும்). கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் அலுவலக உதவியாளரிடம் நேரில் கொடுக்கலாம். அதனைப் பெற்றுக் கொண்டு பெற்றமையை ஒப்புக் கொள்தற்கான அறிவித்தலைக் கொடுத்தற்கு அன்னாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

6. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சில் (கொடுப்பனவு கிளையில்) அல்லது கொழும்புக்கு வெளியே யுள்ள யாதேனும் கச்சேரியில் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100 கட்டி, அப்பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தே கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படலாம்.

7. விதிக்கப்படும் பிரகாரம் மாதிரிப் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு (விநியோகக் கிளைக்கு) விண்ணப் பித்து மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பெறலாம்.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
29 ஏப்றில் 1970.

5–246—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

களனி இராஜமஹா விகார பாதுகாப்புத் திட்டத்தில் 7 கடைப் பிரிவுகளையும், திறந்தவெளிச் சாலைகளையும் அமைப்பதற்காக கேள்விப்பத்திரங்கள் வரவேற்கப்படுகின்றன.

கேள்விப்பத்திரப் படிவங்கள் 1970, யூன் மாதம் 5 ம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 1970, யூன் மாதம் 13 ம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு 2, தேசிய வீடமைப்புத் திணைக்களத்திலுள்ள அத்தியட்சப் பொறியியலாளரிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

து. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

5–249—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## உணவுப் பகுதி

### பாவனைக்குகந்ததல்லாத சணற் சாக்குகளும் சேலைப்பைகளும் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள்

சாமேஸ் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 55,855 சணற் சாக்குகளும் சேலைப்பைகளும் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் 2.6.1970 செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிவரை 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவுக் காரியாலயத்தின் கோரிக்கைச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கோரிக்கைகள் ரூபா 500 கட்டி இவ்வலுவலகத்திலிருந்து பெறும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும். இக்கோரிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. நடராசா,
உணவு அதிகாரிக்காக.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு மே மீ 6 ந் உ.

5–277—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## வித்தியா பகுதி

கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 7 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.30 மணிவரை யாழ்ப்பாண வட பெரும்பாக கல்வித் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| பாடசாலைப் பெயர்கள் | வேலை விபரங்கள் |
|---|---|
| (1) யா/நல்லூர் ஆசிரியர் கலாசாலை .. | ஸ்நான அறையும் நீர் அடைப்பு மல கூடமும் அமைத்தல் |
| (2) யா/கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி | தொழில் பேட்டை விஸ்தரிப்பும் 120′ நீளம் கொண்ட சுற்றுப்புறச் சுவர் கட்டுதலும் |

### மாவட்ட குறுக்கம்

யா=யாழ்ப்பாண மாவட்டம்

**குறிப்பு.**—பதிவுத்தகைமை

மேற்கூறிய 1 ம் வேலைக்கு ரூபா 9,100 மும் அதற்கு மேலும்

மேற்கூறிய 2 ம் வேலைக்கு ரூபா 13,700 மும் அதற்கு மேலும்

2. இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு கல்வி, கலாச்சார அமைச்சில், பொது வேலைப் பகுதியில் அல்லது நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதியப்பட்டவர்களுக்கு 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 6 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை வடபெரும்பாக கல்வியதிபதி அவர்களால் வழங்கப்படும். (நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 15,000 க்கும் அதற்கு குறைந்த தொகைக்கும் பதியப்பட்டவர்கள் மேற்படி வேலைகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் அல்லர்). இவ்வேலைகளுக்கு ரூபா 100 கொழும்பு கலாச்சார அமைச்சு அலுவலகத்திலோ அல்லது வடபெரும்பாக கல்வித் திணைக்களத்திலோ அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எக்கச்சேரியிலோ கட்டியதாக பற்றுச்சீட்டு வடபெரும்பாக வித்தியாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். காசோலை, மணியோடர், போஸ்ரலோடர் ஆகியன ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்கான காசு கட்டுவதற்குரிய பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளரின் அலுவலகத்துப் பாடசாலை வேலைகள் கிளையிலிருந்து அல்லது வட பெரும்பாக கல்வியதிபதியின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பில் காண்பிக்கப்பட்டபடி பதியப்பட்டதாக அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கு மாத்திரமே பணமிடும் பத்திரம் வழங்கப்படும்.

3. நீர்ப்பாசனத் திணைக்களத்தில், பொதுவேலைப்பகுதியில் அல்லது கல்வி அமைச்சில் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இடுபணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுமுன் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்டதாக அவை அத்தாட்சி காண்பித்து கேள்விப்பத்திர படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

4. 2 ம், 3 ம் பந்தியில் குறிப்பிட்டபடி வடபெரும்பாக வித்தியாதிபதியிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அக்கந்தோரிலிருந்து வேண்டிய மாதிரிப்படம் பிறவிபரங்களும் அறியலாம். கேள்விப்பத்திரங்கள் பதிவு செய்த தபால் மூலம் தலைவர், கேள்விச்சபை, வடபெரும்பாக கல்வித் திணைக்களம், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசமிட்டு அனுப்பப்படவேண்டும். உள்ளூர் விண்ணப்பகாரர்கள் கேள்விப்பத்திரங்கள் தபாலில் அனுப்ப விரும்பாவிடின் விண்ணப்பகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ தமது கேள்விப்பத்திரங்களை அடையாள முத்திரையிட்டு யாழ்ப்பாண கல்வித்திணைக்கள நிர்வாக உதவியாளரிடம் கொடுத்து பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளல் வேண்டும். மேலுறையில் விண்ணப்பக்காரரின் பெயர், விலாசம் முதலியன குறிப்பிடப்பட வேண்டும்.

5. 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 7 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண, 153, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வடபெரும்பாக கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். விண்ணப்பக்காரர்கள் இவ்வேளையில் அங்கு பிரசன்னமாய் இருக்கலாம். அவர்களுக்கு கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும்.

6. கேள்விப்பத்திரங்களை பெறும் திகதி முடிவடைந்தபின் ஆறு வாரங்களுக்கு தமது கேள்வியை அமுலில் வைக்க வேண்டுமென்று கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்போர் வேண்டப்படுவர்.

7. யாழ்ப்பாண வடபெரும்பாக கல்வித் திணைக்கள பாடசாலை வேலைகள் கிளையில் பரிசீலனைக்கென கேள்விப்பத்திரங்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

8. இக்கேள்விப்பத்திரங்களுக்கு 30.9.1966 க்கு முன் கல்வித் திணைக்களத்தால் பதியப்பட்ட ஒப்பந்தகாரப் பதிவுகள் கல்வி; கலாச்சார அமைச்சினால் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

சி. தணிகாசலம்,
கல்வியதிபதி,
வட பெரும்பாகம்,
யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
153, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண்டு மே மீ 4 ந் உ.

5–229—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906.

## கச்சேரி, வவுனியா

கீழ்க்காணும் கட்டிட வேலைகள் சம்பந்தமாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரால் 1970 ம் ஆண்டு யூன் மாதம் 2 ம் திகதி செவ்வாய்க் கிழமை நடுப்பகல் 12 மணி வரைக்கும் தனித்தனியே முத்திரையிடப் பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. பொதுக்கிணறு கட்டல் மகாகச்சுக்கொடியாவில்.
2. பொதுக்கிணறு கட்டல் பாலமோட்டையில்.
3. பொதுக்கிணறு கட்டல் தண்ணிமுறிப்பில்.
4. பொதுக்கிணறு கட்டல் மாங்குளம் கொலனியில்.
5. பொதுக்கிணறு கட்டல் ஆனந்தபுரத்தில்.
6. சேமமடுவில் உள்ள கொலனி அதிபரின் விடுதியில் திருத்த வேலைகள்.
7. பாவற்குளம் 3 ம் படிவத்தில் உள்ள கொலனி அதிபரின் விடுதியில் திருத்த வேலைகள்.
8. பாவற்குளம் 1 ம் படிவத்திலுள்ள கொலனி அதிபரின் விடுதி யில் திருத்த வேலைகள்.
9. பெரியதம்பனையிலுள்ள கொலனி அதிபரின் விடுதியில் மேல் அதிக வேலைகள்.
10. பெரியதம்பனையிலுள்ள கொலனி அதிபரின் விடுதியில் கிணறு, கேட், வேலி முதலியன அமைத்தல்.
11. தண்ணிமுறிப்பில் உள்ள கொலனி அதிபரின் விடுதியில் கிணறு, கேட், வேலி முதலியன அமைத்தல்.
12. புதிய காணிக்கந்தோரில் மேலதிக வேலைகள்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் பெற்றுக்கொண்ட வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் (இரு பிரதிகளும்) நிரப்பி அனுப்பி வைத்தல் வேண்டும். இவ்வேலைகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அரசாங்க அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக் காரர்களிடமிருந்தும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியவைகளிடமிருந்தும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் கச்சேரியில் ரூபா 25 (ஒவ்வோர் வேலைகளுக்கும்) கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டு காட்டுபவர் களுக்கு மட்டுமே வழங்கப்படும். கிராம முன்னேற்றச் சங்கங்களும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கட்டுப்பணம் செலுத்துவதி லிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். கேள்விப்பத்திரங்கள் 22.5.70 தொடக் கம் 1.6.70 வரைக்கும் இக்கச்சேரியில் வழங்கப்படும்.

பி. சி. பெரேரு,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி, வவுனியா,
6.5.70.

5–285—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## வன பரிபாலன பகுதி—மட்டக்களப்பு

மட்டக்களப்பு (கிழக்குப் பிரிவு) மாவட்ட வன பரிபாலன உத்தியோகத்த ரால், அம்பாறை பறகாகலேயில் ஒரு தேக்கங்கொட்டைக் களஞ்சியம் அமைப்பதற்கு கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு மே மாதம் 29 ந் திகதி நண்பகல் 12 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 25 செலுத்தி, கேள்விப் பத்திரத்தை இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.

3. மேலதிக விபரங்களை எனது அலுவலகத்திலிருந்து அல்லது அம்பாறை வன பரிபாலன அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள லாம்.

எஸ். முத்தையா,
மாவட்ட வன பரிபாலன உத்தியோகத்தர்,
(கிழக்குப் பிரிவு).

வன பரிபாலன அலுவலகம்,
மட்டக்களப்பு,
1970 ம் ஆண்டு ஏப்ரல் மீ 27 ந உ.

5–299—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

எனது இல. எல்/95

## காணிக் கொமிஷனர் இலாகா

மொனருகலை மாவட்டத்தில், கீழ்க்குறிக்கப்படும் கட்டிட வேலைகளுக் கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு, த. பெ. 500, காணிக் கொமி ஷனர் கேள்விப் பத்திர மண்டலத்தின் தலைமையாளரால் 1970.6.5 ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

திஸ்ஸ கதிர்காமம் திட்டத்தில் தலைமை ஆசிரியர் வீடு ஒன்று உதவி ஆசிரியர் வீடு இரண்டும் மலசலகூட்டம் 5, கிணறு ஒன்று கந்தோர் காமராவும் ஸ்டோரும் உட்பட பாடசாலை காமரா 5 கட்டுவதற்காக

2. பகிரங்க வேலைப் பகுதி, கல்விப் பகுதி, அல்லது நீர்ப்பாசனப் பகுதியில் 100,000 ரூபாவுக்கும் அல்லது அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களுக்கு, கேள்விப் பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள் 1970.6.2 ந் திகதி நண்பகல் 12.00 மணி வரை மொனருகலைக் கச்சேரியில் வினியோகிக்கப்படும்.

3. மேல் குறிக்கப்பட்ட வேலைகளுக்கு கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 100 மொனருகலை கச்சேரியிலோ அல்லது வேறு எக்கச்சேரியிலோ பணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டை, மொனருகலை அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்து கேள்விக்கான வெற்றுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். காசோலை கள், தபாற் கட்டளைகள், காசுக் கட்டளைகள் ஆகியன ஏற்றுக் கொள்ளப் பட மாட்டாது.

4. பகிரங்க வேலைப் பகுதி, கல்விப் பகுதி, அல்லது நீர்ப்பாசனப் பகுதியில் 100,000 ரூபாவுக்கும் அல்லது அதற்கு மேலும் பதிவு செய்யப் பட்ட, அங்கீகரிக்கப்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள், பதிவு செய்யப் பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவையும் கேள்விப் பத்திரங் களைச் சமர்ப்பிக்கலாம். ஆனல் கேள்விப் பத்திர வைப்புப் பணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. பதிவு செய்யப்பட்டதற்கான பதிவைச் சமர்ப்பித்தலின் பின்னரே, கேள்விக்கான வெற்றுப் பத்திரங்கள் வினி யோகிக்கப்படும்.

5. கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதியில், பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் கவரில் இடது பக்கமேல் மூலையில் வேலையின் பெயரும், கேள்விக்காரரின் பெயர், விலாசம் ஆகியவைகளும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால் கேள்விப் பத்திரங்களை கேள்விக்காரர் தாமாகவே கொழும்பு திறைசேரி இல. 357 காமரவில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடல் வேண்டும்.

6. கேள்விப் பத்திரங்கள் 1970.6.5 ந் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு மேல் குறிக்கப்பட்ட இல. 357 காமராவில் திறக்கப்படும் பொழுது கேள்விக்காரர்களோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளோ சமூக மாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

7. கேள்விக்காரர்கள் இலங்கைத் தொழிலாளர்களை மட்டும் வேலைக் கமர்த்த வேண்டும்.

8. மேலதிக விபரங்களை மொனருகலை அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பீ. ஜீ. புன்சிஹேவா,
மொனருகலை அரசாங்க அதிபர்,
மொனருகலை மாவட்டம்.

கச்சேரி, மொனருகலை,
1970, மே 6 ந் திகதி.

5–274—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

## கேள்விப் பத்திரங்களைக் கோரும் அறிவித்தலை நிராகரிக்கும் அறிவிப்பு

### கட்டிடங்கள் திணைக்களம்

அரசாங்க வர்த்தமானி 1970.4.24 இதழில் தோன்றும் யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக் கட்டிடத்தைச் சத்திர வைத்திய அரங்காகத் திருத்தி அமைக்கும் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப் பட்டிருக்கின்றது.

தெ. மாணிக்கம்,
கண்காணிப்புப் பொறிவலாளர்,
வட பகுதி (கட்டிடங்கள்).

கட்டிடங்கள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண்டு மே மீ 6 ந் உ.

5–279—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,906

---

## நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவைத் திணைக்களம்

70.5.30 திகதி நண்பகல் 12 மணிவரையும், கொழும்பு, சதம் வீதி, 1031/1, டி மெல் கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவைத் திணைக்களத்தின் ஆணையாளரால் கீழே குறிக்கப்பட்டிருக்கும் வேலைகளுக்குக் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :—

| | இடம் | தொழிலின் விபரங்கள் |
|---|---|---|
| 1. | அனுராதபுரம் .. | குழந்தை இல்லம் கட்டுதல் |
| 2. | அனுராதபுரம் .. | விளக்கமறியல் கட்டுதல் |
| 3. | பெண்கள் சான்றுபெற்ற பாடசாலை, நன்முத்துகலை, கடவத்தை | சுகயீனமுற்றோருக்கு அறையும், போசன அறையும், குசினியும் கட்டுவதற்கு |
| 4. | குழந்தை இல்லம், பாணந்துறை | சுகயீனமுற்றோருக்கு அறை கட்டுவதற்கு |
| 5. | விளக்க மறியல் விடுதி, தெகிவலை | சுகயீனமுற்றோருக்கு அறை கட்டுவதற்கு |
| 6. | குழந்தை இல்லம், பண்டாரவளை | சுகயீனமுற்றோருக்கு அறை கட்டுவதற்கு |

### கேள்விப்பத்திரத்திற்கு வேண்டிய பதிவுகள்

1 அரசாங்கத்துடன் அல்லது கூட்டுத்தாபனத்துடன் ரூபா 75,000 அல்லது அதற்கு மேலதிகமாக.

2 அரசாங்கத்துடன் அல்லது கூட்டுத்தாபனத்துடன் ரூபா 40,000 அல்லது அதற்கு மேலதிகமாக.

3 தொடக்கம் 6 வரையும், அரசாங்கத்துடன் அல்லது கூட்டுத்தாபனத்துடன் ரூபா 20,000 அல்லது அதற்கு மேலதிகமாக.

2. பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இந்தக் காரியாலயத்திலோ அல்லது வேறு எந்தக் கச்சேரியிலோ ஒவ்வொரு வேலைக்கும் கட்டுப்பணமாக 100 ரூபா கட்டி, அதன் பற்றுச்சீட்டை காண்பித்தால், கேள்விப் பத்திரங்கள் 70.5.29 திகதி பிற்பகல் 2.00 மணிவரையும் கொடுக்கப்படும். மேலே குறிக்கப்பட்ட தொகைக்குப் பதிவுசெய்யப்பட்டவர்களுக்கு மாத்திரம் பணம் கட்டும் பத்திரம் கொடுக்கப்படும்.

3. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திரங்கள் இவ்வேலை சம்பந்தமாக அனுப்பலாம். கேள்விப் பத்திரத்திற்காக கட்டுப்பணம் தேவையில்லை. குறிக்கப்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்டதாக அத்தாட்சி காண்பித்தால் மாத்திரம் கேள்விப்பத்திரம் கொடுக்கப்படும்.

4. இந்தக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளபடும் பத்திரத்தில் இரு பிரதிகளுடன் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்த தபாலில், கொழும்பு சதம் வீதி, 1031/1, டி மெல் கட்டிடம் நன்னடத்தைப் பாதுகாவல் நலன் கவனிப்பு சேவை ஆணையாளருக்கு அனுப்புதல் சரி அல்லது நேர்முகமாக இந்தக் காரியாலயத்தில் கொடுக்கப்படலாம். காகிதத்தின் உறையில் இடது பக்கமூலையில் எந்த இடத்திற்கென்றும், எவ்வேலைக்கென்றும் தெளிவான எழுத்தில் காட்டப்படல் வேண்டும்.

5. 70.6.1 திகதி முற்பகல் 10 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் இந்த அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரம் கேள்விப்பத்திரக்காரர் பிரசன்னமாகலாம்.

6. வேறு விபரங்கள் தேவைப்படின் இக்காரியாலயத்தின் தொழில் கிளையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

எம். வி. டி. சந்திரரத்தின,
நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவை ஆணையாளருக்காக.

நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு,
சேவைத் திணைக்களம், 1031/1, டி மெல் கட்டிகம்,
சதம் வீதி, கொழும்பு.

5–202/1—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல 14,906

---

## நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவா திணைக்களம்

1969-70 நிதி வருடத்து பின் அரை ஆண்டு காலத்துக்குள் நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவா திணைக்களத்தின் கீழ் உள்ள கட்டிட நிலையத்திற்கு கட்டிடப் பொருட்களை கொடுப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்.

கொழும்பு, காலி, களுத்துறை, பதுளை ஆகிய மாவட்டங்களின் கீழுள்ள கட்டிட நிலையங்களுக்கு கட்டிடப் பொருட்களை கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவை திணைக்களத்தின் ஆணையாளரால் 70.5.30 ந் திகதி முற்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**கொழும்பு மாவட்டம்**

(1) நற்முத்துகலை சான்றுபெற்ற பெண் பாடசாலை ;
(2) வுட்பட் பாக்கொலை சான்றுபெற்ற ஆண் பாடசாலை ;
(3) தெகிவலை விளக்கமறியல் விடுதி.

**காலி மாவட்டம்**

(1) கொக்கலை சான்றுபெற்ற பாடசாலை ;
(2) காலி சிறுவர் இல்லம் ;
(3) திக்கடுவ சான்றுபெற்ற பாடசாலை.

**களுத்துறை மாவட்டம்**

(1) பாணதுறை சிறுவர் இல்லம்.

**பதுளை மாவட்டம்**

(1) கப்பற்றிப்பொலை சான்றுபெற்ற பாடசாலை ;
(2) பண்டாரவெல சிறுவர் இல்லம்.

**கட்டிடப் பொருட்கள் பின்வருமாறு :—**

(1) செதுக்காத கல் 6′ 9″ கியூப்பாக ஒன்று ;
(2) உடைத்த கல்லு 3′4″ கியூப்பாக ஒன்று ;
(3) ஆற்றுமணல் கியூப்பாக ஒன்று ;
(4) செங்கல் 1000 (பிரமாணம் 8 3′4″ 4 1′2″ 2 3′4″) ;
(5) சுட்ட சுண்ணும்பு புசலாக சாக்குடன் 85 ருத்தலுக்குக் குறையாத ;
(6) நீற்றுச் சுண்ணும்பு புசலாக சாக்குடன் 42 ருத்தலுக்குக் குறையாத ;
(7) மூங்கில் 25 அடி தொடக்கம் 30 அடி வரை.

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

(1) பேர்ன்காம் பாடசாலை, அச்சுவேலி,

கேள்விப்பத்திரம் பெறுவதற்குமுன் இக்காரியாலயத்திலோ அல்லது கிட்டுமானமான கச்சேரியிலோ வைப்புப் பணமாக 50 ரூபா கட்டி அதற்குரிய பற்றுச்சீட்டு எனக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 70.5.29 ந் திகதி முற்பகல் 10.30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் இக்காரியாலயத்திலே கொடுக்கப்பட்ட பத்திரத்தில் நிரப்பி பதிவுத்தபாலில் அல்லது கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் பெட்டிக்குள் **70.5.30** திகதி நண்பகல் **12** மணிக்கு முன் அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் " கட்டிடப் பொருட்கள் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரம் " எனத் தபாலுறையில் இடது புறமேல் மூலையில் குறிப்பிட்டு ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரக்காரர் கேள்விப் பத்திரங்கள் திறக்கும்போது **70.6.1** பிற்பகல் **2.30** மணிக்கு நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவா திணைக்களத்தின் கொழும்பு, சதாம் வீதி, டி மெல் **1031/1** ம் கட்டிட பிரதான காரியாலயத்தில் பிரசன்னமாக இருக்கலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒரு கிழமைக்குள் நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்பு சேவா திணைக்களத்தின் ஆணையாளருடன் ஒப்பந்தம் ஒன்றிற்கு கைச்சாத்திடுமாறு வேண்டப்படுவர். குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் ஒப்பந்தம் சம்பந்தமாக கைச்சாத்திடத் தவறினால் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாதென்றும், அப்பணம் அரசாங்கத்தின் நிதிக்குச் சேர்க்கப்படுமென்றும் ஒப்பந்தத்திற்கு தவறினவர்களென்று ஒப்பந்தப் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என்றும் கருதப்படுவார்கள்.

வேறும் விபரங்கள் தேவைப்படுமாயின் பிரதான காரியாலயத்தின் கட்டிட வேலைக்கிளையில் விசாரித்துக் கொள்ளலாம்.

எம். வீ. டீ. சந்திரரத்தின,
நன்னடத்தை பாதுகாவல், சிறுவர்
நலன் கவனிப்பு சேவா திணைக்களத்தின்
ஆணையாளர்.

5–202/2—15.5.70 ந் திகதிய வர்த்தமானி இல. **14,906**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் .. | 3.4.70 | வெள்ளி .. | 25.3.70 | புதன் .. | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி .. | 3.4.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி .. | 8.4.70 | புதன் .. | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி .. | 17.4.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் .. | 23.4.70 | வியாழன் .. | பி. ப. 3.30 |
| மே .. | 8.5.70 | வெள்ளி .. | 30.4.70 | வியாழன் .. | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி .. | 8.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி .. | 15.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி .. | 22.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| யூன் .. | 5.6.70 | வெள்ளி .. | 29.5.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் .. | 5.6.70 | வெள்ளி .. | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் .. | 11.6.70 | வியாழன் .. | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் .. | 18.6.70 | வியாழன் .. | ந. ப. 12.00 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மாச்சு மீ 5 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.